Registered No. M. 2330 ACC. NO. 33773

'SIDDHANTHAM'
Vol. 25—No. 7

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

| மலர் 25 | நந்தன ஆடி 1952 ஜூலை | இதழ் |
| --- | --- | --- |

உள்ளுறை



பத்திராசிரியர்: சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.


உதவிப் பத்திராசிரியர்: வித்வான் - வை. குஞ்சிதபாதம் பிள்ளை

சைவ சித்தாந்த மகா சமாஜம்

53, திருவள்ளுவர் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15



பாணந்துறை கந்தசாமி கோயில் புதிதாகக் கட்டப்பட்டு மகா கும்பாபிஷேகம் 5-6 '52ம் திகதி நடக்கப்பட்டது. திருவாளர் ஸ்பென்சர் இராசரத்தினம் டிஸ்ட்ரிக் நீதிபதியால் கட்டப்பட்டது.



பாணந்துறை கந்தசாமி கோயில்
ஆதி மூலஸ்தானம்

Reg. M. 2330

உ

# சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு

மலர் 25 | நந்தன ஆடி 1952 ஜுலை | இதழ் 7

## 1. நாட்டு ஒலி

### 1. குறிப்பிடத்தக்க ஒரு மகாநாடு

நமது நாட்டில் கணக்கற்ற மகாநாடுகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சமய மகா நாடுகளும், பெரும்பான்மையாக உண்டு. அம் மகா நாடுகள் சமய சங்கங்களாலும், மடத்தார்களாலும் பெரும்பாலும் நடைபெறுகின்றன. ஆலய அதிகாரிகள் அவைகளில் ஈடுபடுவதில்லை. தனித்த நிலைமையில் அவர்களில் சிலர் ஈடுபடக்கூடும். ஆனால், அதிகார முறையில் ஈடுபடுவது அரிது. அரசாங்கத்திற்குச் சேர்ந்த சமயப் பகுதியார்கள் சிறிதும் ஈடுபடுவதில்லை. இந்த நிலைமையில் நமது சென்னை இராச்சியம் நடந்து வருவதை அறிவோம். இந்த முறைக்குச் சென்னையில் சமயப் பகுதி என்ற ஒரு பகுதியும் (இலாகா) உண்டு. அப்படி இருந்தும் சமய மாநாடுகளில் அரசியலார் யாதொரு அக்கறையும் எடுத்துக் கொள்வதுமில்லை.

ஆனால் மலை நாடாகிய திருவிதாங்கூரில் அவ்வித பராமுகமான நிலைமையில்லை. பண்டைக் காலம் முதற்கொண்டே அந்நாட்டில் கோயில் பரிபாலனத்தை அரசியலாரே நடத்தி வந்திருக்கிறார்கள். மன்னன் முதற்கொண்டு கீழ் அதிகாரி வரையில் கோயில்களில் மிகுந்த அபிமானம் கொண்டிருந்தார்கள். தற்போதும் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையிலே, அந்நாட்டிலே அரியதொரு மகாநாட்டைக் கூட்டினார்கள். அம் மகாநாடு கோயில்களின்

பார்வையாளர்களுடைய அனுமதியில் நடைபெற்றது. அதற்கு அனுகூலமாகப் பொது மக்களும் மடத்தார்களும் இருந்தார்கள். அப்படிப்பட்ட மகாநாடு சென்னை இராச்சியத்தில் இதுவரை நடைபெறவில்லையென்று கூறவேண்டும். அம் மகா நாட்டில் பல சிறப்புக்களும் நடந்தன. ஆகவே அவைகளைப்பற்றி ஒரு சிறிது கூறுவோம்.

திருவிதாங்கூர் இராச்சியத்தில் தெற்குப் பகுதி சுத்தத் தமிழ்நாடு. நடுப்பகுதியும், வடபகுதியும் மலையாள நாடு. தமிழ் பேசும் பகுதிக்கு நாஞ்சில் நாடு என்று பெயர். இந்தப் பகுதியில் பல சிறந்த ஆலயங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டிற்குத் தென் எல்லையாகிய குமரிமுனை இதில்தான் இருக்கின்றது. அங்கே கடற்கரையிலே அருமையான இயற்கை அழகிலே மூன்று பெருங்கடல்கள் சந்திக்கும் இடத்திலே எல்லைத் தேவதையாகக் கன்னிக் குமரி அம்மை தமிழ் நாட்டைப் பாதுகாத்துக்கொண்டு நிற்கிருள். அதற்குச் சிறிது வடக்கே - பத்துக் கல்லில் சிவபெருமான் தாணுமூர்த்தியாகி மிகப் பெரிய கோயிலிலே எழுந்தருளி யிருக்கின்ருர். அதற்கு இரண்டு மைல் வடக்கே நாகராஜனும், சிவபெருமானும், அருமையான பச்சைப்பசேல் என்ற வயல்களுக்கிடையே கோயில் கொண்டிருக்கின்ருர்கள். இந்தத் தூய்மையான தமிழகத்திலே தமிழர்கள் பண்பாடு மிகச் சிறந்து விளங்குகின்றது. இந்நகரத்தின் ஒரு பகுதியிலே வடிவீச்சரம் என்ற வைப்புத்தலம் ஒன்று உண்டு. இதற்கு வடகிழக்கே திருவெண்பரிசாரம் என்ற மங்களாசாசனம் பெற்ற திவ்விய தேசம் ஒன்று இருக்கின்றது. மற்றும் இங்கே கலாசாலைகளும், பண்டகசாலைகளும், அரசியல் அகங்களும் பல உண்டு. இத்தனைச் சிறப்புப்பெற்ற இந்த நகரத்தில் சில நாள்களுக்கு முன் மேலே கூறிய மாநாடு நடந்தது.

அந்நகரத்துப் பெரும் பாதையில் நாகராஜர் கோயிலுக்கு மேற்கே ஓர் அழகிய ஏரிக்கு அடுத்தாற் போல் சித்திரைத் திருநாள் நூலகம் என்ற ஒரு நூலகம் இருக்கின்றது. அந்நூலகம் ஒரு நந்தவனத்தின் இடையில் ஆலய பரிபாலனப் பகுதியாரால் கட்டப்பட்டிருக்கிறது. அதில் சமய நூல்கள் நிரம்ப வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கிலேயத்தில் அடிக்கடி சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. சில ஆண்டுகளாகச் சமய மாநாடுகள் நடைபெறுகின்றன. அம்மகா நாடுகளுக்குத் திருவாவடுதுறை ஆதினத்தார்கள் பொருளுதவி செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு அச்சமய மகாநாடு நான்கு நாள்கள் நடைபெற்றது. இரண்டு நாள்கள் சித்தாந்த ஆசிரியர் தலைமை வகித்தார். சிவஸ்ரீ ஈசான சிவாசாரியார், வித்வான் பழனி முதலியார், அபேதானந்த அடிகள் முதலியோர் அதில் கலந்து கொண்டார்கள். ஏராளமான தமிழ் மக்கள் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

இம் மகா நாட்டில் சிறப்பாக ஒரு செய்தி நடந்தது. ஆலய பரிபாலன குழுவின் அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அக்குழுவின் தலைவர் திரு. உன்னித்தான் அவர்கள் மகா நாட்டைத் தொடங்கி வைத்தார்கள். சமயப் பயிற்சி மக்களுக்கு அவசியம் என்றும், சமய நிலையங்களாகிய ஆலயங்களில் வழிபாடு நடத்துவதோடு நிற்காமல் சமயப் பயிற்சியையும் மக்களுக்குத் தரவேண்டும் என்றும் அப்பயிற்சி தருவதற்குச் சொற்பொழிவுகளும் நூலகங்களும் ஏற்படுத்த வேண்டும் என்றும், நூலகங்களை ஒட்டி, சமய மகாநாடுகள் நடைபெற வேண்டும் என்றும் இக்கொள்கைகளை அநுசரித்தே இந்த மகாநாடு—கூட்டப்பெறுகிறதென்றும், சமயப் பயிற்சியைச் சிறப்பாக நடத்துவதற்காக, ஆலயங்களை ஒட்டிப் பகவத்கீதை வகுப்புகள் நடத்தி வரப்படுகின்றன என்றும், திரு. உன்னித்தான் அவர்கள் தெளிவாக மலையாள மொழியில் பேசினார்கள். இந்தப் பேச்சு சமய மகாநாட்டிற்கு மிகுந்த பலன் அளித்தது. திரு. உன்னித்தான் அவர்களும் மற்றொரு அங்கத்தினர் திரு. பரமு அவர்களும் முதல்நாள் இறுதிவரை இருந்து தமிழ்ச் சொற்பொழிவுகளையும் கேட்டு மகிழ்ந்தார்கள். ஆலய நூலகங்களை விரிவுப்படுத்துவதாகவும் சொன்னார்கள். ஆகவே இந்தச் சமய மகாநாடு ஒரு குறிப்பிட்ட தனித்த பெருமை கொண்டதல்லவா ?

## 2. கோயில் நூலகங்கள்

கோயில்களை ஒட்டி நூலகங்கள் இருக்கவேண்டியது அவசியம் என்று புலப்படும் அல்லவா ? அதனைத் திருவிதாங்கூர் அரசியல் மட்டுமல்ல, பண்டைக் காலத்து மக்கள்

எல்லாரும் அறிந்திருந்தார்கள். நூலக இயக்கம் மிகப பண்டையது. அதனை நாகரிகம் பெற்ற உலகம் முழுவதுமே கையாண்டு வந்திருக்கின்றது. மனிதன் எழுத்து வாசனை அறிந்த நாள்முதற் கொண்டே நூலக இயக்கம் உலகத்தில் தோன்றியிருக்கின்றது. நூலகம் அல்லது நூல் நிலையம் பண்டைக் காலத்தில் ஏற்பட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு—அரசியலார் தங்கள் நடவடிக்கைகளைக் குறித்து வைப்பதற்காக நூல்களை எழுதி அறைகளில் சேமித்து வைத்தார்கள்—மற்றும் சமய குருக்கள் தாங்கள் இயற்றி வந்த சடங்குகளை ஒழுங்காக நடத்துவதற்காகச் சமய விதிகளை எழுதி வைத்தார்கள். இந்த இரண்டு காரணங்களுக்காக நூலக இயக்கம் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகத்தில் இருந்து வருகின்றது. மேற்கு நாடுகளிலே ஈஜிப்ட், அஸ்ஸீரியா, பேபிலோனியா, கிரீஸ், ரோம் முதலிய பண்டைய நாடுகளில் நூலக இயக்கம் பரவியது. கீழ்நாடுகளிலே அராபியா, சீனு, கொரியா முதலிய நாடுகள் அதனைக் கைக்கொண்டார்கள். நமது பாரத நாட்டிலோ வடபகுதியில் ஜைன பௌத்த மடாலயங்களிலும் மன்னர்கள் கொலுக் கூடங்களிலும் அந்த இயக்கம் வேர் ஊன்றியிருந்தது. தக்ஷசிலம், நவத்வீபம், முதலிய கலை மன்றங்களில் நூலகங்கள் இருந்தன. நடுநாட்டில் இளாபுரி, அஜந்தா, கந்தகிரி, குகாலயங்களில் நூல் நிலையங்கள் சேகரிக்கப்பட்டிருந்தன. இனி தென்னுட்டிலோ மதுரையில் முதல், இடை, கடைச் சங்கங்களில் நூலகங்கள் இருந்தன. மீனும்பிகைத் திருக்கோயிலில் பொற்ருமரைக் குளத்தில் சங்கப் பலகையிலிருந்து நூற்றுக்கணக்கான புலவர்கள், எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு முதலியவைகளைத் தொகுத்து வைத்தார்கள். பல்லவர் காலத்திலும் சோழர் சாம்ராச்சியத்திலும் கர்னுடகப் பேரரசிலும் தமிழ்நாடு முற்றிலும் ஆலயங்களை ஒட்டி நூலகங்கள் இருந்தன. ஆலயச் சுவர்களில் வெட்டியுள்ளக் கல்வெட்டுக்களே. நூலக இயக்கத்திற்குச் சான்றுகளாகும்.

### 3. மடாலய நூலகங்கள்

வட நாட்டில் சமண பௌத்த மடாலயங்களில் நூல் தொகுதிகள் நிரம்ப இருந்தன. 650 கி. பி.யில் சீன

நாட்டுப் பௌத்த யாத்திரி 'யுவான் சங்கு' மலைகளைக் கடந்து நமது நாட்டிற்கு வந்து அளவு கடந்த நூல்களை இங்கிருந்து கொண்டு சென்றார். மத்திய ஆசியாவில் பௌத்த மடாலயங்களில் குகைகளுக்குள்ளே, நூலகங்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. பாரத நாட்டிலும் பண்டைய மடங்களில் கணக்கற்ற நூல்கள் இருக்கின்றன. தென்னாட்டிலும் திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், மயிலம், துறையூர்ப் பெரிய மடம் போன்ற மடங்களில் கணக்கற்ற ஏட்டுப் பிரதிகள் இருந்தன. தற்போது எவ்வளவோ பிரதிகள் மறைந்து போய் விட்டன. தற்போதும் துளுவநாட்டில் உடுப்பியில் எட்டுமடங்கள் இருக்கின்றன. அம்மடங்களில் இருட்டறைகளில் கணக்கற்ற ஏட்டுப் பிரதிகள் தூங்கிக் கொண்டிருக்கின்றன. அவைகளைப் பிரிப்பாரும் படிப்பாரும் இல்லை. இவைகளெல்லாம் தற்கால முறைப்படி அச்சுவாகனம் ஏற்றினால் நமது நாட்டிற்கு எத்தனைப் பயன் வரும், என்று கூறவும் வேண்டுமா? ஆகவே ஆலயங்கள் மட்டுமேயன்றி மடங்களிலும் நூலக முயற்சி இருந்து வந்திருக்கின்றது.

## 4. நூலக மகாநாடு

மேல் நாடுகளில் நூலக இயக்கம் மிகுந்த வளர்ச்சி அடைந்திருக்கிறது. இங்கிலாந்திலே 500–ஆண்டுகளுக்கு முன் நூலக இயக்கம் துவக்கப்பட்டது. 100–ஆண்டுகளுக்கு முந்தி நூலக இயக்கத்திற்காகத் தனிச்சட்டம் ஏற்படுத்தப்பட்டது.—(1850) ஒவ்வொரு கிராமம் தோறும் நூலகம் உண்டு. அவைகளின் பரிபாலனத்திற்காக மக்கள் வரியும் கொடுக்கிறார்கள். அமெரிக்கா முதலிய நாடுகளில் கணக்கற்ற நூலகங்கள் உண்டு. நமது நாட்டிலோ தற்போதுதான் நூலகச் சட்டம் தொடங்கியிருக்கின்றது. (1948) இன்னும் சரியாக நூலகங்கள் ஏற்படுத்தப்படவில்லை. அடிக்கடி மகாநாடுகள் கூட்டினால் ஒழிய நூலகங்களின் பலன்களைப் பொது மக்கள் அறிவது அரிதாகிவிடும்.

அவ்வியக்கத்தின் பலன்கள் எவை என்று கூறுவோம்—அறியாமை ஒழித்தல், படித்ததை மறவாமை,

பகுத்தறிவு பெறுதல், சோம்பல் ஒழித்தல், இன்பம் பெறுதல், பிழைப்பிற்கு வழிகொடுத்தல், வெளியிடுவோர்களுக்கு உதவி புரிதல், அச்சகங்களுக்கு வேலை தரல், காகிதத் தொழிலுக்கு ஆதரவு ஆக்குதல் என்பன. இப்பலன்கள் முழுவதும் பொது மக்கள் பெரும்பட்சத்தில் நமது நாட்டில் எழுத்தறியாமை என்பதே மறைந்து போகுமல்லவா ? இவைகளை வற்புறுத்த வேண்டி நூலக மகா நாடுகள் கூட்டப்பட வேண்டும்.

## 5. நாகர் கோயில் மகா நாடு

நாகர் கோயில் மகாநாடு சமய மகா நாடாயிருந்த போதிலும் அது நூலக மகா நாடாகவும் இருந்தது. சித்திரைத் திருநாள் மன்னரின் பெயரால் ஏற்படுத்தியிருந்த நூல் நிலையத்தின் சார்பில் அம்மகா நாடு நடைபெற்றது. அம்மகா நாட்டிலே சித்தாந்த ஆசிரியர் சமயமும் நூலக இயக்கமும் என்ற பொருள் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர். திருவிதாங்கூர் இராச்சியத்தில் இந்த நூலகம் போல கணக்கற்ற நூலகங்களும் இருக்கின்றன. அங்கே இரண்டு வகை நூலகங்கள் உண்டு. பொது நூலகங்கள் ஊரை ஒட்டியும் ஊர்ச் சபையை ஒட்டியும் இருக்கின்றன. சமய நூலகங்கள் ஆலயங்களை ஒட்டியிருக்கின்றன. மாநாட்டுக்குச் சென்றபோது சில நூலகங்களைப் பார்க்கும் பெருமை இடைத்தது. ஒன்றிரண்டைப் பற்றிச் சிறிது விரிவாகக் கூறுவோம்.

திருவண் பரிசாரம் என்ற மங்களாசாசனம் பெற்ற தலம் நாகர் கோயிலுக்கு வடகிழக்கே இரண்டரை மைல் அளவில் உள்ளது. அது நம்மாழ்வாரால் பாடப்பெற்றது. நம்மாழ்வாரின் தாயார் உடைய நங்கையின் பிறப்புத்தலம். இந்த ஊரில் நம்மாழ்வாருடைய திருமடம் தற்போது பஜனைக் கூடமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்கு அருகே நம்மாழ்வார் நினைவு நூலகம் என்ற ஒரு பெரிய நூல் நிலையம் அண்மையிலே ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனைத் தமிழ்க்கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் திறந்து வைத்திருக்கிருர்கள். இந்நூல் நிலையம் சிறப்பாக மக்களால் போற்றப்படுகிறது. அருமையான சமய நூல்கள் இதில் உள்ளன.

மேலும் திருவாட்டாறு என்ற மற்ருெரு திவ்விய தேசம் நாகர் கோயிலுக்கு வடக்கே பதினெட்டு கல்லில் ஓர் அழகான இடத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இவ்விடம் அற்புதமான இயற்கை அழகைப் பெற்றிருக்கிறது. அழகிய ஆற்றங் கரையில் ஒரு பெரிய கோயில் கட்டப்பட்டுள்ளது. சோழநாட்டு மாடக் கோயில்போல 15 அடி உயரத்தில் கோயிலின் தளம் இருக்கின்றது. திருப்பணி பெரும்பாலும் கருங்கற்பணி. மூலவர் ஆதிசேடன்மேல் படுத்திருக்கும் நிலை. திருமேனி மிகப்பெரியது. அதனை மூன்று வாயில்களிலும் பார்க்க வேண்டும். மேற்குமுக சந்நிதி. திருமால் கோயில் ஆனாலும் சிவமூர்த்தங்களின் உருவங்கள் பல உள்ளன.

கல்தூண்களில் பேரூர் கனகசபை போன்ற வேலைப்பாடுகள் உண்டு. எதிர் எதிரே இரண்டு தூண்களில் ஊர்த்துவ தாண்டவமும் நடனகாளியும் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். உருவங்கள் மிகப் பெரியவை. மன்மதனும் இரதியும் மற்றை இரண்டு தூண்களில் இருக்கிறார்கள். இச்சிறந்த சிற்ப வேலைகளைத் தமிழ் நாட்டுச் சிற்பிகள் செய்தார்களோ என்பது ஐயம். இந்த திவ்விய தேசத்திலே ஆலயத்தை ஒட்டி சமய நூல்நிலையம் ஒன்று உண்டு. இவைகளைப் போலவே பல ஆலயங்களிலும் நூல் நிலையங்கள் அந்த நாட்டில் வைக்கப் பட்டுள்ளன. நமது தமிழ் நாட்டில் உண்டா ?

## 6. தமிழ் நாட்டில் வேண்டாமா ?

மலை நாட்டில் ஆலயங்களை ஒட்டிச் சமய நூல் நிலையங்கள் இருக்க நமது தமிழ்நாட்டில் அப்படிப்பட்ட நூல் நிலையங்கள் இருக்கின்றனவா என்ற கேள்வி எழும்புகிறது. தருமபுர மடத்திற்குச் சேர்ந்த கோயில்களைத் தவிர வேறு எந்தக் கோயில்களில் சமய நூல்நிலையங்கள் இருக்கின்றன ?

மதுரை, பழனி, பேரூர் போன்ற சில கோயில்களைத் தவிர மற்றக் கோயில்களில் சமய நூல்நிலையங்களைக் காண்ப தரிது. ஏன் அவ்வாறு இல்லை? இதற்குப்பொதுமக்களிடம் உணர்ச்சியில்லாமையே ஒரு காரணம் என்று கூறலாம். ஆனாலும் அரசியலாருக்கு இதில் ஒரு கடமை இல்லையா ?

எப்போது தேவாலயங்கள் ஒரு அரசியல் பகுதியின் மேல் பார்வைக்கு வந்து விட்டனவோ அப்போதே அவைகளைச் சரிவரப் பராமரிக்கும் கடமை அரசியலுக்கு உண்டு. தமிழ் நாட்டுத் தேவாலயங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சமய நூல் நிலையம் இருக்கவேண்டும். அந்நூல் நிலையங்கள் செவ்வையாக நடைபெறும் பொருட்டும் பலன் தரும் பொருட்டும் நூல் நிலைய மாநாடுகள் அவ்வப்போது கூட்டப்பெறவேண்டும். இவ்வாறன மாநாடு ஒன்றுதான் நாகர்கோயிலில் அண்மையிலே கூட்டப்பெற்றது. அதைப் போலவே தமிழ் நாட்டிலும் நடைபெற வேண்டியது சிறப்பு அல்லவா ?

---

## 2. தலப்பகுதி

# 1. பனங்காட்டூர்

1. இடம் : இதன் திருமுறைப் பெயர் திருவன்பார்த் தான் பனங்காட்டூர் என்பது. வன்பாக்கம் என்ற ஊரின் அருகில் இருந்தபடியால் அப்பெயர் பெற்றது. புறவார் பனங்காட்டூரை வேறுபடுத்தி இப்பெயர் வந்தது. மேலும் பனங்காட்டை அடுத்துள்ளதால் பனங்காட்டூர் என்ற முதற்பெயர் குறிக்கும். இது வடஆர்க்காட்டு வட்டத்தைச் சேர்ந்தது. காஞ்சிபுரத்தை விட்டுத் தெற்கே 4 கல்லில் ஐயன் குளத்தை அடைந்து அதிலிருந்து மேற்கே ஆர்க்காட்டுப் பாதையில் 4 கல் சென்று வடக்கே திரும்பி முக்கால் கல் சென்றால் இந்தத் தலத்தை அடையலாம். இடையில் பாலாறு, வேகவதி, இரண்டாறுகளையும் தாண்டவேண்டும்.

ஊர் சிறிய ஊர். புன்செய் கிராமம்.

தொழில் உழவு. பனைமரங்கள் மிகுதி.

2. திருக்கோயில் : இரண்டு சந்நிதிகளைக் கொண்டது. மூலத்தானங்கள் இரண்டு அடுத்தடுத்து உள்ளன. ஒன்று தாளபுரீசர் அதாவது பனங்காட்டு நாதர் ; மற்றொன்று கிருபாநாதேசர். இரண்டு மூலத்தானங்களும் கருங்கற்களால் கட்டப்பட்டவை. கருவறை வடிவம் யானைமுதுகு போன்றது (கஜப்பிருஷ்டம்). அரைச் சந்

திரன் அல்லது அரைவட்டமாகப் பின்புறம் இருக்கும். முன்புறம் சதுரமாக இருக்கும். விமானமும் அது போலவே அரைவட்டமாகப் பின்புறமும் முன்புறம் செங்குத்தாகவும் இருக்கும். பின்புறம் மேலே செல்லச் செல்ல முதுகுபோல் வளைந்து இருக்கும். இவ்வடிவச் சிற்பக்கலை தொண்டை நாட்டில் மிகுதி. விமானத்தை முன்னின்று பார்த்தால் அர்த்த சந்திர வடிவமாகத் தோன்றும்.

3. மூர்த்திகள் : அகஸ்தியர் வழிபட்ட மூர்த்தி - பனங்காட்டீசர் (தாளபுரீசர்). அம்மை - அமிருதவல்லி. இதனையே சுந்தர மூர்த்திகளும் பாடியிருக்கிறார். மற்றொன்று புலஸ்தியர் பூசித்தது. அது கிருபாநாதேசர்; தேவி-கிருபாநாயகி ; விருக்ஷம் - பனை ; தீர்த்தம் - ஜடாகங்கை. தீர்த்தம் பெரிதாக நன்றாகக் கட்டப்பட்டுள்ளது.

4. நூல்கள் : சுந்தரர் பாடியுள்ள "விடையின் மேல் வருவானை" என்ற தேவாரம் உண்டு. "மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்" என்றதினால் அக்காலத்தில் இவ்வூர் செழிப்பாக இருந்திருக்கவேண்டும். தேவாரத்தில் மகுடமாக "சாராதார் சார்பென்னே" பேசாதார் பேச்சென்னே" என்று குறித்திருத்தல் போற்றத் தக்கது

5. கல்வெட்டுக்கள் : இதில் உஉ கல்வெட்டுக்கள் இருக்கின்றன. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தில் கலியூர்க் கோட்டத்தில் கழுமல நாட்டில் இவ்வூர் உள்ளது. சுவாமிபெயர் திருப்பனங்காட்டுடையார் என்பது. இதற்கு சோழன் விஜய நகரத்தார் முதலானோர் காலத்தில் பல தானதருமங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒரு கல்வெட்டில் அங்கே வழங்கும் நீட்டல் அளவையின் அளவு குறித்துள்ளது. அதன் இறுதியில் ஒரு பனைமர உருவம் செதுக்கப்பட்டுள்ளது. மற்றொரு கல்வெட்டு 1381-ல் இங்கே பஞ்சம் வந்ததைப் பற்றிக் கூறுகிறது. விருபாட்சன் I காலத்தில் ஏரியின் மதகு முறிந்துபோய் நீர் இல்லாமல் போகக் குடியானவர்கள் சூலவரி கொடுக்கவில்லையாம். மற்றொரு கல்வெட்டு இந்த ஆலயத்தில், தட்சிணாமூர்த்தி மகாவிஷ்ணு பிரம்மா, துர்க்கை முதலிய திருவுருவங்கள் தாபிக்கப்பட்ட

செய்தி கூறுகிறது. உயிருடன் இருக்கும் பனைமரங்களை வெட்டுகிறவர்கள் தண்டனைக் குட்படுவார்கள் என்று மற்ெருரு கல்வெட்டு கூறுகிறது. இங்கே பனைமரம் தலவிருக்ஷம். ஆதலால் இந்த உத்தரவு இடப்பட்டது போலும். திருக்கண்ணப்பர் குடும்பத்திற்குச் சேர்ந்தவர் என்றுகூறிச் சில வேடர்கள் சம்புவராயன் பொருட்டு தானங்கள் செய்துள்ளார்கள். கண்ணப்ப உடையார் நாளில் 1367-ல் ஒரு விஜயசிம்மதேவன் கோயில் அதிகாரியாக நியமிக்கப் பட்டான்.

ஹரியரன் II நாளில் 1381-ல் ஏரி பழுது பார்க்கப் படாமல்போய் சாகுபடி இல்லாமல் வரிகொடுக்காமல் போய்விடக் கோயில் அதிகாரிகள் சில நிலங்களை விற்று அதன் பணத்தைக் கொடுத்து ஏரியைப் பழுது பார்த்தார் களாம்.

இந்தக் கோயிலிலே உள்ள பெரும்பான்மையான கல் வெட்டுக்கள் விஜயநகரத்து அரசர்கள் காலத்தவை. ஆகவே இந்த நாடு அவர்கள் ஆதினத்தில் சிறப்புற்று இருக்க வேண்டும்.

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையிலன் புடையானை யாவர்க்கு மறிவொண்ணு
மடையில்வா ளைகள்பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே. 1

தண்ணூர்மா மதிசூடித் தழல்போலுந் திருமேனிக்
கெண்ணூர்நாண் மலர்கொண்டங் கிசைந்தேத்து மடியார்கள்
பண்ணூர்பா டலறுத படிறன்றன் பனங்காட்டூர்ப்
பெண்ணுணைய பிரானைப் பேசாதார் பேச்சென்னே. 2

பாரூரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானைச்
சீரூருந் திருவாரூர்ச் சிவன்பேர்சென் னியில்வைத்த
ஆரூரன் அடித்தொண்டன் னடியன்சொல் லடிநாய்சொல்
லூரூரன் னுரைசெய்வா ருயர்வானத் துயர்வாரே. 3

—சுந்தரமூர்த்தி நாயனர்

# 2. திருவோத்தூர்

1. இடம் : வட ஆர்க்காடு வட்டம் சேயாறு தாலுகாவின் தலைமைப்பட்டினம். அச்சிறுபாக்கத்துநிலையத்திலிருந்து வடமேற்கே 18 கல். காஞ்சிபுரத்திலிருந்து மேற்கே 18-கல். ஆர்க்காட்டிலிருந்து தென்கிழக்கே 18 கல். ஊர் பெரியது. இரண்டு பகுதிகளாக உள்ளது. சேயாற்றிற்கு மேல்புறம் பெரும் பகுதியாகப் பல கச்சேரிகள் பாடசாலை முதலியவைகளைக் கொண்டது ஒன்று. கீழ்புறம் கோயிலும், சத்திரங்களும் மாடவீதிகளும் உள்ளது மற்ருெரு பகுதி. இரண்டையும் பிணைத்திருப்பது அணைப்பாதை. வெள்ளம் வரும்போதெல்லாம் இந்தப் பாதை பழுதுபட்டுப் போகும். ஆற்றினுல் கோயில் மதில்களுக்கும் அடிக்கடி அபாயம் நேரிடுவதுண்டு.

ஊரில் நெசவுத்தொழில் அதிகம். முதலியார்களின் வீடுகளும் கோயில்களும் உண்டு. துணி வியாபாரமும் மிகுதி.

தற்போது திருவத்திபுரம் என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது.

2. திருக்கோயில் : பெரியது. கருங்கல் திருப்பணி. அமைப்பு பண்டைக்கால முறைப்படி உள்ளது. கோயில் முன்கோபுரம் பெரியது. ஒரு பெரிய கல்விட்டம் வெடிப்பு விட்டிருக்கிறது. அதைப் பழுது பார்க்க முடியவில்லை. மற்றைப் பகுதிகளும் பழுதுபார்க்கப்படவேண்டும்.

கோயில் மேற்புறம் சேயாறு மதிலை ஒட்டி ஓடுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் இந்த ஆற்று வெள்ளத்தினுல் பெரிய நஷ்டம் உண்டாகிப் பாதைகள், வீடுகள், அணைகள் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டன. இதைக் கண்டால் இங்கே அடிக்கடி வெள்ளம் வரும்போல் இருக்கிறது. கல்வெட்டிலும் சோழர் காலத்தில் அடிக்கடி வெள்ளம் வந்து ஊரை நாசம் பண்ணியிருக்கிறதாம்.

3. மூர்த்திகள் : சுவாமி வேதநாதர்: தேவி இளமுலைநாயகி. திருவோத்தூர் என்பது திரு+ஒத்து+ஊர் என்று பிரிக்கப்படும். ஒத்து என்ருல் வேதம். தேவர்கட்கும்

முனிவர்களுக்கும் இறைவன் வேதம் ஓதுவித்து அனுக்கிரகம் செய்த காரணத்தினுல் இப்பெயர் வந்ததாம்.

4. ஐதீகம் : இத்தலத்தில் ஞானசம்பந்தர் எழுந்தருளியபோது அங்கே எல்லாப் பனைகளும் காயாத ஆண்பனைகளாக இருந்ததை முன்னிட்டுச் சமணர் ஏளனம் செய்ய அடியார்கள் விண்ணப்பித்தபோது தேவாரம் அருளிச் செய்து ஆண்பனையைப் பெண்பனையாக்கிய அற்புதம் நடந்த இடம். அப்பனை பின்னர் சிவபதம் அடைந்ததாம். பிறகு பனை அங்கே பிரதிட்டம் செய்யப்பெற்று, தற்போது பூசிக்கப்பெற்று வருகிறது. இதனைச் சம்பந்தர் திருக்கடைக் காப்பில் "குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்" என்று குறித்திருக்கின்றுர். தேவாரம் பின்னுல் காண்க.

5. தீர்த்தம் : ஆறு-சேயாறு. கோயிலுக்கு மேற்கே அதனை வளைத்துக்கொண்டு செல்லுகிறது. பெரும்பாலும் மணல்வெளி. திடீரென்று வெள்ளம் வரக்கூடியது.

6. நூல் : இத்தலத்திற்குத் தமிழ்ச் செய்யுள் தலபுராணம் ஒன்று உண்டு. இயற்றியவர் கருணுகரக் கவிராயர். சோணுசல முதலியார் பொழிப்புரை எழுதியிருக்கின்றுர் 1016 செய்யுட்களும், பாயிரமும், 27 சருக்கங்களும் கொண்டது. பனைமரத்தின் சிறப்பு, ஆண்பனை பெண்பனையாக்கிய பெருமை இவை இரண்டும் சிறந்த பகுதிகள். நூல் அச்சிடப்பட்டுள்ளது.

7. கல்வெட்டுக்கள் : இந்தத் தலத்தில் 28 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவைகளுள் சோழர்களுடைய கல்வெட்டுக்களே முக்கியமானவை. குலோத்துங்கச் சோழன் காலத்தில் ஒருவன் வேட்டையாடச் செல்லுகையில் அம்பு தவறி ஒரு ஆளைக் கொன்றுவிட்டது. அதற்காக இக் கோயிலுக்கு ஒரு நந்தா விளக்கு வைக்க 16 பசுக்களைத் தானம் செய்தான் இக்கோயில் தானங்கள் பெரும்பாலும் நந்தாவிளக்கு வைப்பதற்குப் பசுக்களும், ஆடுகளும் கொடுக்கப்பட்டதே ஆகும். விக்கிரம சோழன் (1118-35) காலத்தில் ஒருபெருவெள்ளம் வர, கிராமத்தையும், பயிரையும், குடிகளையும் அது நாசம் செய்துவிட, குடியானவர்கள் வரிகொடுக்க முடியாமல் போக, ஒரு ஆதித்தன் உய்யவந்

தான் என்ற ஒரு பிரபு, 25 காசுக்காக 2800 குழி நன்செய்களை வாங்கி ஆலயத்திற்குத் தந்தான். அக்காலத்தில் அரசனுடைய பாதத்தளவு ஓர் அளவுகோல் ஆக்கப்பட்டு உபயோகிக்கப் பட்டதாம். இராஜராஜன் காலத்தில் ஒரு நந்தவனம் வாங்கப்பட்டது. மேலும் இந்த நாட்டை சம்புவராயர், கோப்பெருஞ்சிங்கன் முதலியோர் ஆண்டுவந்தனர். இவ்வூரில் கேதாரி நாதர் மடம் ஒன்று இருந்தது. மேலும் சங்கரநாராயண அகரம் என்ற ஒரு அக்கிரகாரமும் கட்டப்பட்டதாம். அதற்கடுத்து ஒரு பூங்காவனம் வைக்கப் பட்டதாம்.

பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. 2

தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ளல்குமே. 3

குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம் பந்தன்சொல்
விரும்புவார் வினை வீடே. 4

—சம்பந்தர்

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின்

## அறுபத்தெட்டாவதாண்டு விழாத்

# தொடக்க வுரை

(26—5—'52)

(தேவகோட்டை "சைவ சித்தாந்தப் புரவலர், தமிழ் வள்ளல்" உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்ப செட்டியாரவர்கள்)

திருச்சிற்றம்பலம்

*களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்*
*குளித்துத்தொழுதுமுன்னின்றவிப்பத்தரைக்கோதில்செந்தேன்*
*தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள் சூழிருப்ப*
*அளித்துப் பெருஞ்செல்வ மாக்குமை யாற னடித்தலமே*

—திருநாவுக்கரசர்

திருச்சிற்றம்பலம்

சிவநெறி பேணும் செல்வர்களே! செல்விகளே!!

பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேச்சுரப் பெருமானின் பெருங்கருணை பெற்று, இற்றைக்கு அறுபத்தெட்டாண்டுகளுக்கு முன்னே தோன்றி, இதுகாறும் நிறைவுடையதாய்ச் சைவம் வளர்த்துத் தமிழ் பேணிவரும் தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபைப் பணியில், யானும் பங்கு பெறும்படி செய்த உங்கள் பேரன்புக்கு என்றும் கடமைப் பட்டுள்ளேன்.

எங்கள் தனவணிக நாட்டின் நடுநாயகமாக விளங்கும் குன்றக்குடித் திருத்தலத்தில் எழுந்தருளியிருந்து, சைவ அருளாட்சி நடத்திவரும் நமது திருவண்ணாமலை ஆதீன மகா சந்நிதானம் அவர்கள் தலைமை யேற்கின்ற இப்பெருவிழாவைத் தொடங்கி வைக்கும் பேறு எனக்குக் கிடைத்ததுபற்றி மிகவும் மகிழ்ச்சியை அடைகிறேன்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருவடிக் கமலங்களுக்கு வணக்கஞ் செலுத்தி என் பணிமேற் செல்லுகின்றேன்.

அன்பர்களே ! நம் தமிழகத்திலுள்ள சைவ சித்தாந்த சபைகளில், காலத்தால், முற்பட்ட மூன்றனுள் இந் நகர்ச் சைவ சித்தாந்த சபையும் ஒன்று. இந்தச் சபை, சைவ சித் தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகர், கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார், மா. வே. நெல்லையப்ப பிள்ளை போன்ற சைவப் பேராசிரியர்களின் தொடர்புகளைப் பெற்று வளர்ந்து வந்திருப்பதொன்றே இதன் பெருமைக் குப் போதிய சான்ருகும். சித்தாந்த சாத்திரங்களை முறை யாகப் பாடஞ் சொல்லி வருகிற சிறப்பு, இந்தச் சபைக்கு உள்ள அளவு வேறு சபைக்கு இருக்க முடியாது என்று நினைக்கிறேன்.

இச் சபையின் பெருமைக்கும், வளர்ச்சிக்கும் கார ணமாயிருக்கிற சித்தாந்தப் பேராசிரியர் திரு. ந. சிவகுரு நாத பிள்ளையவர்களைச் சைவவுலகம் என்றும் மறக்கமாட் டாது. பருவம் முதிர்ந்த இந்த நாளிலும் சைவப்பணியைக் கைவிடாது, சித்தாந்த சாத்திர பாடஞ் சொல்லுதலும், சிவபூசை புரிதலுமாதிய நியமங்களை வழுவின்றிச் செய்து வரும் இவர்கள் இன்னும் பல ஆண்டுகள் உடல் நலம் பெற்று வாழ இறைவனிடம் வேண்டிக்கொள்வது நமது கடமையாகும்.

இச் சபையின் தலைவர், உறுப்பினர்களாகிய மற்றைய மெய்யன்பர்கள், இதன் வளர்ச்சியிலும் ஆக்கத்திலும் கண் ணும் கருத்தும் உடையவர்களாய்ப் பணியாற்றி வருவது கண்டு மிகவும் பாராட்டுகிறேன். பெருஞ் சிறப்பு வாய்ந்த இந்தச் சபையின் விழாவைத் தொடங்கிவைக்கும் பேற்றை எனக்களித்த உங்கள் அனைவருக்கும், எனது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பெரியோர்களே ! உலகம் இரண்டு வகைப்பட்ட பொருள்களா லாகியது. ஒரு வகையை இயங்குதிணை யென்றும், மற்ருெரு வகையை நிலைத்திணை யென்றும் சொல்லுவார்கள். இவற்றுள் நிலைத்திணைப் பொருள்களை விட, இயங்குதிணைப் பொருள்கள் சிறந்தன. இயங்கு திணையைச் "சரம்" என்றும் நிலைத்திணையை "அசரம்" என்றும் வடமொழியாளர் கூறுவர். சரம் என்ற சொல் லுக்கு "அசைவுடையது" என்று பொருள். "அசரம்" என்ருல் 'அசைவற்றது' என்று பொருள்படும்.

அசைதலாகிய தொழி லுண்மையையும், இன்மையை யும் வைத்தே, இருவகைப் பொருள்களுக்கும் பெயர் குறித் திருக்கும் வடவர் மரபு, அசைதல் தொழிலுண்மையை யுடைய இயங்கு திணையின் சிறப்பை ஒருவாறு புலப்படுத்து கின்றது. உயிர்ப்பொருள்களில் மரஞ் செடி கொடிகளாதிய ஓரறிவுடையன வொழிந்த பிறவனைத்தும் இயங்கு திணை யின்பாற் பட்டன. அம்மரஞ் செடி கொடிகளாதியனவும் மற்ற உயிரில் பொருள்களும் நிலைத்திணையின்பாற் பட் டனவாகும்.

இவ் வியங்குதிணை நிலைத்திணைகளே யன்றி உயர்திணை அஃறிணை என இரண்டு வகையாகவும் பொருள்களைப் பிரிப் பதுண்டு. "உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே அஃ றிணை யென்மனு ரவரல பிறவே" என்று தொல்காப்பிய மும் "மக்கள் தேவர் நரக ருயர் திணை மற்றுயி ருள்ளவும் இல்லவும் அஃறிணை" என்று நன்னூலும் இத்திணைப் பிரிவு களை விளக்குகின்றன. ஆறறிவு படைத்த மக்களாதி யோரை உயர்திணை யென்றும் ஐந்து முதலாகக் குறைந்த அறிவினவும் உயிரில்லனவு மாகியவற்றை அஃறிணை என் றும் நன்னூலார் கூற, மக்களாகச் சுட்டப் பெறுபவர் உயர் திணைப் பகுப்பின ரென்றும், அச்சுட்டுக் குரியரா யில்லா தார் மக்கள் வடிவத்தினரா யிருப்பினும் அவரும் பிற உயிருள்ள—உயிரில்லாதவைகளும் அஃறிணைப் பகுப்பின வென்றும் தொல்காப்பிய முடையார் கூறினர்.

இக் குறிப்பிலிருந்து மனித வடிவம் பெற்ற அனை வரும் மனிதர்களாக வாழுவதில்லை யென்பதும், "மனிதப் பண்புடையவர்களே மனிதர்களாக வாழுகிருர்க" ளென் பதும் தொல்காப்பியரது கருத்தாதல் பெறப்படுகின்றது. மனிதர்களுக்குச் சிறப்பளிக்கின்ற பண்பாடு அறிவுப் பெருக் கத்தினுல் மட்டும் உண்டாகி விடுவதில்லை.

அறிவால் மனிதன் உயர்வடைகின்முன் என்பது உண்மையே யாயினும், அவ்வறி வொன்றே உயர்வுக்கு அடிப்படையானது என்று சொல்லிவிட முடியாது. அறி வுக்கு நிலைக்களனுயிருப்பது மனம். மனமில்லாத உயிர்ப் பொருள்களேயில்லை. மனிதனின் மனம் நான்குவகையான ஆற்றலையுடையதா யிருக்கின்றது. அவ் வாற்றல்கள் அறி தலும் ஆராய்தலும், தெளிதலும், தெளிவி லுறுதி பெற்று

நிற்றலும் என்று சொல்லப்பெறும். இந் நான்குவிதமான ஆற்றல்களும் மனிதனுக்கு இருப்பதனாலேயே அவனது மனத்தை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களாக நமது ஆன்றோர்கள் பிரித்துக் கண்டார்கள். மற்றப் பிராணிகளுக்குள்ள மனமோ அறிகின்ற ஒரு நிலையோடு அடங்கிவிடுகிறது.

எனவே, அறிவுச் சிறப்பு அதற்கடுத்த படிகளாகிய ஒவ்வொன்றிலும் மேலேறி, இறுதியாகிய தெளிவிலுறுதி பெற்று நிற்கும்பொழுதுதான் முழு நிறைவை அடைகிற தென்பதை உணருதல் வேண்டும். "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு", "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" முதலிய திருக்குறள்களிலிருந்து இவ்வுண்மை நன்கு புலப்படும்.

அறிவாற் பெருமை பெற்றவனாகத் தன்னைக் கருதிக் கொள்கின்ற மனிதன், அவனில் தாழ்ந்த விலங்கு பறவை முதலியவைகளைப் போல அறிதலளவில் வாழ்ந்து ஒழிந்து போகாது, அவ்வறிவு கொண்டு பொருள்களின் பொய்ம்மை மெய்மைத் தகுதிகளை ஆராய்தலும், அங்ஙனம் ஆராய்ந்து பொய்யையும் மெய்யையும் பாகுபாடுசெய்து கொள்ளுதலும், அவ்வாறு பாகுபாடு செய்து கொண்டதற் கேற்பப் பொய்யை யொழித்து மெய்யைக் கடைப் பிடித்து அதில் சிறிதும் வழுவாது உறைப்புடன் நிற்றலும் வேண்டுமென்று பெரியோர்கள் வற்புறுத்தி யுள்ளார்கள்.

தேர்ந்து, தெளிந்து, செயலுறைப்புடையவனாக வாழுகின்றவனே, மனிதப் பண்புடையனாவான். பிறர் அறிய முடியாதபடி வஞ்சனை புரிபவனும் அரசியற் காவல் அலுவலரிடம் அகப்பட்டுக் கொள்ளாது திருடுகின்றவனும், அணுகுண்டு முதலிய அழிவுப் பொருள்களை உண்டாக்குகிற ஆற்றலுடையவனும் அறிவில்லாதவனென்று யாரேனும் சொல்லமுடியுமா? இதனாலேதான் "நல்லது கெட்டதைப் பகுத்துணருகின்றவன் மனிதன்" என்னும் கருத்தைப் புலப்படுத்தி, "தக்க வின்ன தகாதன வின்னவென், றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள, மக்களும் விலங்கே" என்று கம்ப நாடர் கூறினார்.

பகுத்துணரும் ஆற்றல் மனிதனிடம் உண்மையாகத் தோய்வுறுகிறபொழுது, அவன் கடவுட் கொள்கையுடைய வனாக ஆகிவிடுவது உறுதி. நம்முடைய அறிவுகொண்டு நாம் பிறிதொன்றை அளந்தறிந்து முடிவு காணவேண்டு மென்று கருதினால், அக்கருத்திற்குத் துணை செய்யும் அளவு கருவியாக நம்மையே வைத்துக்கொள்வதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. அதன்படி நல்லது—தீயது, மெய்யானது—பொய்யானது ஆகியவற்றை ஆராய்கின்ற பொழுது, நமக்கு நல்லதா—தீயதா நமக்கு மெய்யானதா—பொய்யானதா என்று ஆராயத் தலைப்படுவது நல்ல முறை யாகும்.

இன்பப் பேற்றை நாடிநின்ற நமது பரமாசாரியரா கிய அப்பரடிகள், அவ்வின்பப் பேற்றைத் தருபவர் யாரெ னத் தேடி யலைந்து திரிந்தார். எங்கேயாவது ஓரிடத் தில் இன்பம் கிடைக்கும் என்று எண்ணி நுழைந்தா ரானால், அங்கே அவர் முன்னின்றது எல்லையில்லாத துன் பம் எனக் கண்டார். ஆகவே, தானல்லாத பிறரனைவரும், பிறபொருள்களனைத்தும் துன்ப நிகழ்ச்சிக்கு இடமாக இருப்பதை அறிந்தார். எனவே, தனக்குத் தானே இனியவ ரென்ற காட்சி, முதலில் அவருடைய உள்ளத்திலே தோன்றியது. சிறிது ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்கியதும் தனது உறுப்புக்களாகிய பல், நகம் முதலியவைகள் கூடச் சிலசமயங்களில் தனக்கு ஊறு செய்வதையும், தான் செய்கின்ற செயல்களால் ஈட்டப்பெறுகின்ற வினைப்பயன் கள் துன்ப வடிவத்தில் வருவதையும், சிந்தனைத் திரை அறி வுறுத்தியது.

துன்பம் வராது தடுத்துக்கொள்ளமுடியாத தனக்கு, அத்துன்ப இன்பங்களை ஆக்கவும் அகற்றவும் வல்ல ஆண்டவனே இனியவனா யிருக்கின்றா னென்பதை ஒரு திருப்பாசுரத்தின் மூலமாக நமக்கு அவர் அறிவுறுத்தி யிருக்கின்றார். “என்னி லாரு மெனக்கினி யாரிலை, என்னி லும்மினி யானொரு வன்னுளன், என்னு ளேயுயிர்ப் பாய்ப் புறம் போந்துபுக், கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே” என்ற இத்திருப்பாடல் ஒவ்வொருவர் சிந்தனையிலும் நின்று நிலவுதல் வேண்டும்.

நல்லதைப் பகுத்தறிகின்ற அறிவு, உலகத்துப் பொருள் களில் ஒரு சிறிதளவாவது தீமையிருக்கிற உண்மையை உணர்ந்து, அத் தீமையின் தொடர்பே யில்லாமல் நல்லதே வடிவாயிருக்கிற ஆண்டவனிடம் அன்பு செய்ய முற்பட்டு விடும். அவ்வாறு அன்பு செய்து வாழுகின்ற நெறியே, சமய நெறியாகும். சமய வாழ்வு மக்களின் மனந்தகுதி முதலியவற்றிற் கேற்பப் பலதிறப்பட்டிருக்கக் காண் கின்றோம்.

ஏதேனும் ஒரு சமய நெறியைப்பற்றி வாழாத மனித வடிவம் பெற்ற மற்றப் பிராணி யினத்தவனே யாவான். சமயநெறிகளில் மேலானது சித்தாந்த சைவ நெறி. சமயப் பெருநூல்களில் சிறந்தன திருமுறைகளும் மெய்கண்ட நூல்களுமாம். மற்றச் சமயங்களின் சிறப்புக் கொள்கைகளாயிருப்பவை சித்தாந்த சைவத்தின் பொதுக் கொள்கைகளாகவும், சித்தாந்த சைவத்தின் சிறப்புக் கொள்கைகளாயிருப்பவை வேறெந்தச் சமயத்திலும் காண முடியாதனவாகவும் இருப்பதனாலேயே, சித்தாந்த சைவ நெறி சிறந்ததென்று பேசப் பெறுகிறது.

மற்றைச் சமய நூல்களிலிருந்து உண்டாகின்ற ஆசங்கைகள் அனைத்தையும் அவ்வச்சமயங்களின்பால் வைத்த உரிமையினாலும் நம்பிக்கையினாலும் அகற்றிக் கொள்ளவேண்டிய நிலை அமைந்திருக்க, திருமுறைகளும் மெய்கண்ட நூல்களும் எந்தவிதமான ஆசங்கைக்கும் இடமில்லாது உண்மையைத் தெளிவுபெற அறிவிப்பதனாலேயே, பொருளுணரும் நூல்களில் தலைசிறந்தன " என்று இவற்றைப் பாராட்டுகிறோம்.

" சைவத்தின் மேற்சமயம் வேறிலையதிற் சார்சிவமாந், தெய்வத்தின் மேற்றெய்வமில் " என்ற எல்லப்ப நாவலர் திருவாக்கு இங்கே நினைவுகூரற்குரியது. " வாழ்வெனும் மையல்விட்டு வறுமையாஞ் சிறுமை தப்பித், தாழ்வெனுந் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும், ஊழ் " பெற்ற நாம், உண்மையான பயனை உறுதியாக அடைந்தே தீரவேண்டும்.

அதனை அடைவதற்குரிய சாதனங்களை அறிஞர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ளவேண்டுவது நமது கடமை யாகும். இவ்விழாவில் பல பேரறிஞர்கள் சிறந்த அற

வுரைகளை வழங்க இருக்கின்றார்கள். அவற்றைச் செவி மடுத்துச் சிந்தையிற் றேக்கிச் செயலில் கொணர்ந்து, அயரா இன்பம் பெற உங்களை வேண்டி இவ்விழாவைத் தொடங்கி வைக்கிறேன்.

---

4. சாந்திரப் பகுதி

## சிவப்பிரகாசம் மூலமும் உரையும்

(ஆரணி-முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்)

(மலர் - 25 ; இதழ் - 5 ; பக்கம் 170இன் தொடர்ச்சி)

ஞானவாய்மை

காட்டிடுங் கரண மொன்று மில்லையேற் காணொ ணாதாம்
நாட்டிய விவற்றான் ஞானம் நணுகவு மொண்ணா முன்ன
மீட்டிய தவத்தி னாலே யிறையரு ளுருவாய் வந்து
கூட்டிடு மிவற்றை நீக்கிக் குரைகழல் குறுகு மாறே. கூஅ

என்பது, அறிபொருள்களையும் பொய்ப் பொருள்களையும் அறியக் காட்டுங் கருவிகளுள் ஒன்றுமில்லை யெனில், உயிர்கள் திருவருளைக் காண்டல் ஒன்றாதாகும். உயிர்கள் தமக்குச் சாதனங்களாக நாட்டிய இக்கருவிகளால் அம்மெய்ப் பொருளை அடையவும் மாட்டா. இவ்வாறு கருவிகளில்லாத கேவலத்தும் அவையுள்ள சகலத்தும் உயிர் திருவருளைப் பெறுதல் இல்லையாயின், அதனைப் பெறும் பொழுதும் முறையும் என்னை எனில், முற்பிறவிகளிற் செய்து தொகுத்த தவங்களால், பரமசிவன் திருவருளே வடிவாக் கொண்டெழுந்தருளி, இக்கருவிகளை நீக்கித் திருவடியைக் குறுகும் வண்ணங் கூட்டி யாள்வான் என்பதாம்.

உயிர்க்கு மலம் மாத்திரம் உள்ளதாய்ச் சிவமில்லது கேவலம். சிவமில் உளதாய்ச் சிவமாத்திர முள்ளது சுத்தம். மலம் மாயை முதலிய எல்லாம் உள்ளது சகலம்.

'மெய் பொறிக ளெல்லாம் காவலன் கொடுத்தபோது சகலனும்' என்று (சிவஞான சித்தியார். உஉஎ) சகலத்தை யுணர்த்தியதால், அவை இல்லாததே கேவலம் என்றும்,

அவற்ளுேடு 'மலங்களெல்லாம் ஓவினபோது' சுத்தமென்றும் தெளிவாம்.

கரணம் (கருவி) ஒன்றுமில்லாத கேவலத்தும் ஞானத்தைப் பெறவில்லை. அவை நீங்காத சகலத்தும் அப்பேறில்லை. மற்றெப்பொழுது ஞானப்பேறு எய்தும் என்பார்க்குச் சுத்தத்தே என்பது பாரிசேடத்தாற் கிடைக்கும். 'காட்டிடுங் கரணம்' என்றது கரணம் சாதனம் என்றுணர்த்தும். 'நாட்டிய இவற்ருல்' என்றது 'காவலன் கொடுத்த' உபகாரத்தை உணர்த்தும்.

திருவருட் பேறு சுத்தத்தி லெய்து மாற்றை, முதனூல் ஆருவது சூத்திரம் மிக நுட்பமா யுணர்த்திற்று. அதன் வார்த்திகம், வாக்குமனதீத கோசரமாயுள்ளது. 'சத்தாயுள்ள சிவம் என்று' சிறிது விளக்கிற்று. வழிநூல், 'மனத்தொடு வாக்கிறந்த சித்துரு'(உசச), 'தன்னறிவதனுற்காணுந் தகைமைய னல்லன் ஈசன்' (உசஎ), 'பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமையன்' (உசஅ), 'அறிவினுள்ளே என்றும் நின்றிடுதலாலே இவன் அவன் என்னலாமே' (உசஅ) 'அறிபவன் அருளினுலே அநந்நியமாகக் காண்பன்' (உசகு).

> "இருவினைச் செயல்கள் ஒப்பின் ஈசறன் றன் சத்தி தோயக்
> குருவருள் பெற்று ஞான யோகத்தைக் குறுகி முன்னைத்
> திரிமலன் அறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்த ஞானம்
> பெருகினா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே" (உருO)

என விரித் துணர்த்திற்று. இப்புடைநூல், 'பரந்த நெறி யறுவகையும் ஒருவி நீணே வரிதாம் பரபதம்' (க), 'மாருமலம் அகல அகலாது மன்னுபோதத் திருவருள்'(கO), 'கருத்திலுறை திருவருள்' (கக), 'உள் நிலவும் ஒளி' (கஉ), 'அநந்நியமாய் நிறைந்த அறிவு' (ருசு), 'மனத்தால் உன்னரிய திருவருள்' (ருசு), 'எண்ணரிய ஞான்பாதங் கூடுமவர் தமக்குணர்வாய் நின்ற ஞானக்கூத்தன் ஒருமூர்த்தி கொடுகுறுகி' (சக), 'திரிமலமும் அகலவுயிர் அருள் சேர் முத்தி' (௭O), 'மருள்நிலை யெங்கும் நீங்க மகிழ்ந்துயிர் தன்னுள் மன்னும் அருள்' (சுசு) என்றித் திருவிருத்தத்தின் முன்னர்ப் பலவாறு குறித்தது. பின்னரும் விரித்துணர்த்திற்று. நூல்கள் எவ்வளவு வுணர்த்தினும் எவர்க்கும் குருபதேசத்தா னன்றித் திருவருட் பேறு நண்ணுது.

" சாத்திரத்தை யோதினர்க்குச் சற்குருவின் றன்வசன
மாத்திரத்தே வாய்க்கும்நலம் வந்துறுமே?—ஆர்த்தகடற்
றண்ணீர் குடித்தவர்க்குத் தாகந் தணிந்திடுமோ ?
தெண்ணீர்மை யாய் ! இதனைச் செப்பு "

என்று, நாம் உய்ய வந்த நாயனுர் திருவாக்கின் வாய்மை இங்கு நினைக்கத்தக்கது.

இதில், 'இவற்றை நீக்கி' என்றதால் அசத்தும், 'குரைகழல் குறுகுமாறு கூட்டிடும்' என்றதாற் சத்தும் உணர்த்தியவாறறிக. முதனூலில் 'உணருருவசத்து' என்று செயப்படுபொருள் மேனின்றது. அதுவே இப்புடைநூலில், 'காட்டிடுங் கரண மொன்றுமில்லை யேற்காணுனதாம்' என்று வினைமேல் நின்றது. ஆண்டுச் சுட்டியுணரப்படும் உரு என்னின் அசத்து என்றுர். ஈண்டுச், சுட்டியுணரச் சாதனமாகிய கருவிகளில்லையேல் உயிர் அச்சிவத்தைக் காண்டல் ஒல்லாது என்றுர். உயிர் காணுனதாம் என்று கொண்டு வினை முதல்மேல் நின்றதெனினுமாம். பொதுவுட் சகலாவத்தை யுணர்த்து முகத்தான் தத்துவ ரூபமும், தன் னுண்மை யுணர்த்துந் தன்மையாகிய இதனுள் மேலைச் செய்யுள் காறும் தத்துவ தரிசனமும், இதில் தத்துவ சுத்தியும் உணர்த்திய நுட்பம் கூர்ந்துணரற் பாலது.

மேல் அந்த ஞானத்தை உணர்த்துகின்றுர்.

பன்னிறங் கவருந் தொன்மைப் படிகநீ டொளியும் பன்மை
மன்னிலங் கியல்புந் தந்த வளரொளி போல வையந்
தன்னகம் பயிலு நற்சிற் சடங்கடந் தன்மை தாவா
நன்னலம் பெறநி றைந்த ஞானமே ஞானமேன்பர். ௬௬

என்பது பல நிறங்களையுங் கவரும் பழமையையுடைய படிகத்தின் நீடிய ஒளியையும் அதிற்பொருந்தும் பன்மை மன்னிய ஒளிருமுறைமையையும் அளித்த கதிரவனது பெருகொளியையும் போல உலகிடத்திற் பயில்கின்ற நல்ல சித்தும் அசித்து மாயவற்றின் இயல்பைப் பற்றுத முடிவான நலத்தை (உயிர்கள்) பெற எங்கணும் நிறைந்த திருவருள் ஞானமே ஞானம் என்றுரைப்பர் ஆகமசீலர் என்பதாம்.

(தொடரும்)

7. ஆராய்ச்சிப்பகுதி

# பாவை விளையாட்டு

(அ. தா. ப. திருஞானசம்பந்தம்)

பாவை என்பது ஒரு தனித் தமிழ்ச் சொல். இச் சொல் நந்தமிழ் நாட்டில் பண்டு தொட்டே வழக்காற்றில் இருந்து வருகிறது எனலாம். இச் சொல் சங்க இலக்கியங் களிலும், சமய இலக்கியங்களிலும், பிற இலக்கியங்களிலும் ஆளப்பட்டுள்ளது. இளங்கோவடிகள் என்னும் நற்றவக் குரிசில் பாவை என்ற சொல்லை, தான் இயற்றிப் போந்த திந்தமிழ் நாடக இலக்கியமான சிலப்பதிகாரத்தில் பல விடங்களில் ஆண்டுள்ளார்.

மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!

—மனையறம்படுத்த காதை

இவளோ, கொங்கச் செல்வி குடமலை யாட்டி
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து

—வேட்டுவவரி

பாய்கலைப் பாவை யணிகொண்டு நின்றிவ்
வாய்கொடி நல்லா டவமென்னை கொல்லோ!

—வேட்டுவவரி

இஃதேபோல் சைவ சமய இலக்கியமான திருவாசகம் என்ற நூலில் திருவெம்பாவை என்ற பகுதியில், வான் கலந்த மாணிக்கவாசகர் பெருமான் பாவையை முன்னிலைப் படுத்தி இருபது அரும் பாடல்களில் அரிய கருத்துகளை அமைத்துப் பாடியிருப்பது படித்துப் பயனுறத் தக்கதாகும். இங்ஙனமே ஆண்டாள் அம்மையார் அருளியுள்ள திருப் பாவைப் பாடல்கள் முப்பதின்கண் நல்ல கருத்துகள் சமைத்து மிளிர்கின்றன. மேற்கண்ட இலக்கியங்கள் இயற்ற வந்த அருட் புலமை வாய்ந்த பெருமக்களனைவரும், பாவை என்ற சொல்லைப் பெண்பால் நிலையில் அமைத்துப் பாட்டிசைத்துள்ளனர். அன்றியும் பாவை என்பது மண்

ணற் புனைந்த பொம்மைகளையும், மரத்தாற் செய்யப் பெற்ற பொம்மைகளையும் குறிப்பதாகும்.

தமிழ் நாட்டில் தொன்று தொட்டு மேற்குறித்த சொல் ஆட்சியில் உள்ளதென்று கூறினோம். அது வழி வழியாகப் பாவை விளையாட்டு என இன்று வரை வளர்ந்து நம் சிறுர்களிடையே செழித்தோங்கி வருவதைக் காணலாம். தமிழ் நாட்டுச் சிறுவர்களும் சிறுமிகளும் தங்கள் இள மைக் காலத்தை, தெருவில் மணல் வீடு கட்டி, சிறு சோறு அட்டி பாவைக்கு மணம் செய்து இன்புறும் நிலையைத் தடையின்றி இன்றுங் காணலாம். இது புதிதாய்க் கற் குங் கலையல்ல; அன்றி சிறுவர்களுக்கோ, சிறுமிகளுக்கோ புதிதாய்ப் பயிற்றுவிக்கப் பெறுங்கலையுமல்ல. இயற்கையி லேயே தமிழ்ச் சிறுர்களிடையே பாவை விளையாட்டு வளர்ந் தது; வளர்கிறது.

குழந்தைப் பருவத்தில் வாழ்பவர்கள் பாவை விளை யாட்டு நிகழ்த்துவதில் பொருளுண்டு. கற்றுத்துறைபோய கவிஞர்களும் அவ் விளையாட்டு நிகழ்த்த ஆசை கொள்கிருர் களே? அஃது ஏற்குமோ? தகுதியா? தகுதிதான்! கவி ஞர்களும் குழந்தைகள் தானே! பால் மணம் மாருப் பச் சிளங் குழவியின் உள்ளம் தூயதாய் அன்றே இருக்கும். அதன் முகத்தில் நிலவுவது எழிலுடை இன்பம். அஃதே போல் இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடி வெடுத்த இன்ப இறையுடன் ஒன்றி இலயிக்கும் கவிஞர் கள் உள்ளம் தூயதாய் இருப்பதன்றி வேறு யாதாய் இருக்க இயலும்? இயற்கை அன்னையின் அறவணைப்பில் உள்ள அவர்களுக்குக் குறையும் உண்டாமோ? சொன்ன தைச் சொல்லும் கிளிப்பிள்ளை யொத்த சிருர்களும், சிறுமி களும் மணலில் சென்று பாவை விளையாட்டு நிகழ்த்துகிருர் கள். ஆனல் கவிஞர்களோ செஞ்சொற்கள் என்ற மணற் பரப்பில் பாவை விளையாட்டு விளையாட ஆசை கொள்கிருர் கள். விளையாட்டோ—ஒன்றுதான்! அதில் நிகழும் செயலோ—வேறுதான்! தூய்மையான உள்ளத்தால் கவி ஞன் மனம் குழந்தை மனத்தை யொத்தது என்பது முடிவு

இளஞ் சிருர்களை யொத்து, தமிழ் நாட்டுக் கலைக் கவி ஞர்—ஏன்? உலகக் கவிஞரான ஒரு அறிவினல்லார் ஒரு பேரிலக்கியத்தைப் படைக்கவருங்கால், பாவை விளையாட்டு

நிகழ்த்துகிறார். விளையாடுபவர் தகுதியுடையவர்தான். அத்தகையவர் யார் என்ற வினா எழுமல்லவா? ஆம்! அவர் தான் உலகம் போற்றும் உத்தமக் குறள் நூலை அளித்த திருவள்ளுவராவர். இவரைப் பற்றி அறியாத தமிழக மக்கள் இதுபொழுது ஒரு சிலரே என ஒருவாறு கூறலாம். இப் பெருமகன் 133 அதிகாரங்கள் கொண்ட 1330 அருங் குறட்பாக்கள் இயற்றியுள்ளார். இரண்டு அதிகாரங் களில் ஆசிரியர் நிகழ்த்தும் பாவை விளையாட்டு மிகுபயன் தருவன. விளையாட்டிலும் எவ்வளவு கருத்துகள் பொங் கித் ததும்பி வழிந்தோடுகின்றன என்பதைக் காண்போம்.

கல்லாமை என்றோர் அதிகாரம் பற்றிப் பேச வரு மிடத்தில் ஓர் குறளில் புனைபாவையையும், இரவச்சம் என்ற அதிகாரம் பற்றிப் பேச வருமிடத்தில் மரப்பாவை என்றும் ஆண்டு தெள்ளிதின் இரு பொருள்களை விளக்கு கிறார். மிக நுனித்து ஆராய்ந்து அறிவுநலந்துய்த்ததற் குரிய இடங்களில் வைத்து (பாவை என்ற சொல்லை) கருத் துக்களை மிகுதியாக அதன்கண் நிரப்பி, கற்றோர் அனை வரையும் அதன் கவின்மிகு வனப்பில் அமிழச் செய்து, களி பேருவகை எய்தவைக்கும் பெற்றி வள்ளுவப் பெருந்தகை யாரைச் சாருமன்றோ!

உலகிடைப் பலதிற மக்கள் வாழ்வதைக் காண்கிறோம். நல்லோர்கள், தீயோர்கள் என்ற பட்டியல் தயாரித்து ஏறக் குறைய பலரையும் கணக்கிடலாம் நல்லோர்களுக்கும், தீயோர்களுக்கும், இடையில் நிற்கும் ஒரு சிலரும் உண்டு. எவர் நல்வாழ்வைப் பற்றியும் கவலைப்படாது, தங்கள் சொந்த வேலைகளையும் கண்ணுறாது, அறிவு பெற எண் ணாது, அழகாக ஆடை அணிகலன்களால் தங்களை அழகு படுத்திக் கொள்பவர்களே நல்லோர். தீயோர் இவர்களுக் கிடையில் நிற்போர். இவர்களைப் பாவை என்றழைப்பதில் என்ன தவறு? இன்று நம் தமிழ் நாட்டில் வெகு அழகாக களிமண் களிம்பினாலும், மரத்தாலும், பொம்மைகள் செய் யப் படுகின்றன. சற்றுத் தூரத்தில் இருந்து கண்டால் அயன், இத்துணை அழகிற் சிறந்தவைகளைத் தோற்றுவித் தனனோ என ஐயத்தைக் கிளப்பி, மகிழ்வை எழுப்புகின் றன. காட்சியளவில் மக்கள் தோற்றமாகவே உளதன்றோ? நெருங்கி, அதனை நோக்கின் அது நம்மிடம் வார்த்தைகள்

பேச இயலுமோ? இயலாதன்றோ! அஃதே போல்வது தான், ஆடை அணிகளால் அழகு படுத்தி அறிவைப் பெருக்கி வாழாத மக்கள் நிலை என்கிறார் வள்ளுவர்.

நுண்மா ணுழைபுலம் இல்லா னெழினலம்
மண்மாண் புனை பாவை யற்று.

(குறள் 7—அதி 41)

இரவு என்றோர் அதிகாரத்தில் மரப்பாவை என்று வள்ளுவர் ஆண்டிருப்பதாக முன்னர் கூறினோம். இரவு என்பது மானம் நீங்காமல் யாசித்தலானது—யாசியாமை யோ டொத்ததாம். அங்ஙனம் யாசித்தல் தவறில்லை என் பதே பெருநாவலரின் கருத்தாகும். இக் கருத்தை வலி யுறுத்த வந்த ஆசிரியர் பின் வருமாறு கூறுகிறார். தரித் திரத்தால் வருத்தப்பட்டு வந்து யாசிப்பாரில்லையானால், குளிர்ந்த இடத்தையுடைய பெரிய பூமியிலுள்ளார் வருத லும் போதலும் எதுபோல என்றால் உயிரில்லாத மரப் பாவை சூத்திரக் கயிற்றினால், நடந்து சென்று வந்தாற் போலும் என்பதே. யாசிப்பவருக்கு வேண்டுவன கொடுத் துப் புகழும் புண்ணியமும் பெறுதல் மரப்பாவைக்கு இல்லையாதென்பதாம். கொடுத்துப் புகழ் பெறுதவர் உயி ரிருந்தும் உயிரில்லாத மரப்பாவைக்கு ஒப்பாவர் என்பது கருப் பொருள்.

இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்,
மரப்பாவை சென்று வந்தற்று. (குறள் 8—அதி 107)

பயன் படுத்தியுள்ள இரண்டிடங்களும் சிந்தித்தற் குரியன. கல்லாதவன் - புனைபாவை. ஈந்து வாழ அறியாதவன் மரப்பாவை. நல்ல நூலறிவால், இயற்கை அறிவாம் நுண் ணறிவிற்குத் துணை செய்து, நன் முறையில் பொருட் செல் வம் பெற்று அவற்றை வகுத்து அறத்துறைகளில் செலவு செய்து வாழுங் காலத்தே, பாவை நிலை நீங்கி, ஒருவன் மனிதநிலை எய்துகிறான்.

வள்ளுவரின் பாவை விளையாட்டு எவ்வளவு இன்பத் தையும், அறிவியல் கருத்துகளையும் நமக்குப் புகட்டுகிறது பாருங்கள்! தமிழ் நாட்டுச் சிறார்கள்—சிறுமிகள் பாவை விளையாட்டு, அவர்கள் வாழப்போகும் எதிர்கால வாழ்க்கை

யைப் பற்றிய ஒருதலை எண்ணம் அவர்கள் உள்ளத்தில் வளர்கிறது. கவிஞன் விளையாட்டு, தனக்கு மட்டும் இன்பத்தை நல்கும் முறையில் அமைத்துக் கொள்ளாது, எல்லா மக்களும் இன்பம் அடையவேண்டும், அதன்வழி அவர்கட்குப் பேரறிவு பெருக வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டிலங்குகிறது. வளர்க வளமாகக் கவிஞன் பாவை விளையாட்டு நாட்டிலே !

---

8. விரிவுரைப் பகுதி

# ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளும் பெரியபுராணமும்

(மலர் - 25 ; இதழ் - 6 ; 240-ம்பக்கத் தொடர்ச்சி)

இச்சரிதங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நல்வழி இச்சியாது சென்று கொண்டிருப்பவனைத் திருத்திச் செந்நெறிக்குச் செல்லும்படிச் செய்விப்பன. சோழநாட்டை முறை செலுத்தி வந்த அநபாயச் சக்கரவர்த்தி என்பான் காவிய இலக்ஷணங்கள் பெற்றுள்ளதான சீவக சிந்தாமணியை நாடோறும் அன்போடும் கேட்கும் நியமம் உடையவனாக இருந்தான். அவர்பால் முதன் மந்திரியாயிருந்த சேக்கிழார் பெருமான் அரசனை நோக்கி இக்கதை சமணர் பொய்நூல். இம்மைக்கும் மறுமைக்கும் ஆகாது. "வளம் மருவுகின்ற சிவகதை இம்மைக்கும் மறுமைக்கும் உறுதி." அதனைக் கேட்பாயாக என்று அறிவுறுத்தினர். அரசனும் அதற்கியைந்து அக்கதைகள் யாவை? சொல்லுக எனக் கூறச் சேக்கிழார் பெருமான், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத் தொகையுள் அருளி அடியார்களது வரலாற்றினை முற்றும் எடுத்துப் புகன்று அதற்கு வகையாக நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியினுக்குப் பொருள் கூறினர். உள்ளன்போடு உருகிக் கேட்டவனை அரசனும் மகிழ்ந்து இச்சரிதங்களையெல்லாம் விரிவாக எழுதித்தரல் வேண்டும் என்று வேண்டினன். சேக்கிழார் சுவாமிகளும் இது திருவருட்செயலென்று

கருதி அவன்பால் விடைகொண்டேகி சிதம்பரம் சென்று தில்லைக் கூத்தனை வணங்கி, அவன் தந்த "உலகெலாம்" என்னும் முதலைக் கொண்டு அரும்பெரும் புராணமாகிய இப்புராணந்தனை முடித்தருளினர். அதனுடைய சிறப்பு:

"பூவை மறந்தனள் வெண்டாமரையில்
புகல்தரு சங்கப் புலவோர்சொற்
பாவை மறந்தனள் தேச சுபாடித
பயனை மறந்தனள் பதுமத்தோ
ளுவை மறந்தனள் பொதிய மலைத்தலை
நண்ணிய புண்ணிய முனிவனெனுங்
கோவை மறந்தனள் சேவையர்
காவலனார்திரு நாவிற் குடிகொண்டாள்"

எனவரும் திருப்பாட்டினிற் கண்டு தெளிக. அன்பு புராணமாய் இறைவனுடைய அருளைத்தான் பெற்று விளங்குவதோடு படிப்போர்க்கும் திருவருளைக் கூட்டுவிக்கும் செயலுடைமையான் இப்புராணம் சைவத் திருமுறைகளுள் பன்னிரண்டாவதாகச் சேர்க்கபட்டது. முறையென்பது புத்தகம் எனப் பொருள்படும். ஒழுக்க முறைகளைத் தெரிவிப்பது ஆத்மஞானத்தைக் கூட்டவல்ல நூல்கள் திருமுறையாம். எல்லாப் பொருளும் அடங்கிய காரணத்தால் முதல் எழு திருமுறைகளுக்கும் அடங்கன்முறை என வழங்கலாயிற்று. இதன்கண் உள்ள தேவாரங்களை யெல்லாம் நன்குக உணர்ந்து அவற்றில் திளைத்து அரிய பொருள் களையெல்லாம் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தின் கண்ணே விளக்குவாராயினர். இனி செய்யுள்களின் நயம் ஆராய்வாம்.

அருள்வயமாய் நின்று பாடிய புராணமாதலின் அரிய கருத்துக்கள் அடங்கிய பாடல்கள் பல உள்ளன. இவைகளில் ஒன்று குமர குருபர சுவாமிகளை ஆட்கொள்ளும் திறம் வாய்ந்தது. அது,

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ளான்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக

விந்துவாழ் சடையா ளுடு மானந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்.

எனும் அருமைத் திருப்பாட்டாகும். குமரகுருபரர் பாண்டிய நாடு முழுமையும் ஆங்காங்குள்ள திருக்கோயில்களைத் தரிசித்து அதனின்றும் அகன்று சோழநாட்டை அடைந்தார். திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, திருவாரூர் முதலிய தலங்களையெல்லாம் தரிசித்துத் தருமபுர ஆதீனத்தின்கண் வீற்றிருக்கும் மாசிலாமணி தேசிகரது பெருங் கீர்த்தியைக் கேள்வியுற்று அவரைத் தரிசித்தற் பொருட்டு அங்குச் சென்றனர். இருவரும் உரையாடி இறுதியிலே மாசிலாமணித் தேசிகர் மேற்கூறிய திருவிருத்தத்திற்கு அனுபவப் பயனை வினவ வாக்கு தடைப்பட்டது. குமரகுருபரர் முன்னர் ஷண்முகக் கடவுள் சொல்லியவண்ணம் இவரே தமது குருமூர்த்தியாவார் என்று நினைந்து மனங்கலங்கி இருக்கை விட்டெழுந்து சாஷ்டாங்கமாக அவரை வணங்கித் தம்மை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். அவரது ஆணவ மலத்தின் செருக்கை அறுப்பதற்கு எழுந்ததோர் உபாய மாக இத்திருப்பாடல் விளங்கிற்று. அப்பாடலின் கருத்தை அவ்வருட் புலவரே விளக்க விழித்தாரெனின் நம்மவர் விளக்க முயற்சிப்பது நகையினை நிறுத்தும்.

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல் கண்டு தரியாது
மண்ணவர்கள் மழை பொழிந்தார் வானவர்பூ மழை சொரிந்தா
ரண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழ விடைமேல்
விண்ணவர்க டொழ நின்றான் வீதிவிடங் கப்பெருமான்."

" கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை பொழியாதே
பெய்யுந் தகையன கரணங்களு
முடனுருகும் பரிவின பேறெய்த
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரு
மின்றாழ் சடையோடு நின்றாடு
மையன் திருநட மெதிர்கும்
பிடுமவரார்வம் பெருகுத லளவின்றால்."

இவை இரண்டும் சிறமுகுடையன. பாட்டின் சந்தம் தட்டுத் தடையின்றி பேசுவதுபோல் ஒழுகுகின்றது. சிலேடைகளும் மடக்குகளும் பொருந்தியுள்ள பல பாட்டுக்கள் உண்டு.

சேக்கிழார் சுவாமிகள் மற்றப் புலவர்களைப் போலல்லாது தனது புராணத்தின் கண்ணே பல நாடுகளையும், பல ஆறுகளையும் வர்ணிக்கவேண்டி யிருந்தது. ஒருநாடு, ஒரு நகரம் இத்தன்மையாகத்தான வர்ணித்தல் வேண்டும் என்பதனை வழிகாட்டியாக அவர் அறிவித்தார். திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணத்துள் தொண்டை நன்னாட்டின் சிறப்பு போதிய சான்றாகும். இலக்கணத்திற்கும் இலக்கியமான இப்புராணம் விளங்குகின்றது. இவ்வருமைப்பாட்டைத் திரிசிபுரம் மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்கள் தாம் அருளிய சேக்கிழார் பிள்ளைத்தமிழில் காப்புச் செய்யுளில் "வினையுருபுதொகை நான்கனடியாதி செய்து" என போற்றினமை கண்டுதெளிக. 'உலகெலாம்' என்னும் திருவிருத்தத்தின் நான்காவது அடியிலே 'மலர் சிலம்படி' என்னும் சொற்றொடர் அவர் கூறிய இலக்கண அழகையுடையதாக உள்ளது. இத்திருவிருத்தத்தில் மற்றொரு அழகையும் காண்கிறோம். இது அறுபத்து மூன்று எழுத்துக்களினால் ஆக்கப்பட்டுள்ளது. இப் புராணத்துள் கூறப்படும் தனியடியார்களின் கணக்கு அறுபத்துமூன்றே. சிதம்பரத்தின் அருமையும் இது கூறுவதாகும். இறைவனுடைய உருவங்கள் மூன்று. அவை அருவம், அருவுருவம், உருவம். இம்மூன்று உருவங்களையும் தாம் சிதம்பரத்தின் கண்ணே பெற்றிருப்போமென்று இறைவன் அருளினர். 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்பது அருவ நிலைமை. 'நிலவுலாவிய நீர்மலி வேணியன்' என்பது உருவத்தைக் குறிக்கும். உருவம் உடையவனாய் அவயவப் பாகுபாடின்றி இருத்தல் அருவாருருவமாகும். அதுவே 'அலகில் சோதியன்' ஆகுந் தன்மை. இவைகளுக்கு அப்பாற்பட்ட நிலைமையே சிதாகாசத்தில் ஆடுங்கோலம். இனி, ஒரு செய்யுளின் பொருட் பயனைக் கவனிப்போம்.

* வேதியர் தில்லை மூதூர் வேட்கோவர் குலத்து வந்தார்
மாதொரு பாக நோக்கி மன்னுசிற் றம்பலத்தே

யாதியு முடிவுமில்லா வற்புதத் தனிக்கூத் தாடு
நாதனார் கழல்கள் வாழ்த்தி வழிபடு நலத்தின் மிக்கார்'

என்பது திருநீலகண்ட நாயனார் புராணத்துள் முதற்றிருப் பாட்டு. தில்லை என்பது சிதம்பரம். அதனை கோயில் என்று ஆன்றோர் வழங்கினர். மற்றத் தலங்களெல்லாம் காரணப் பொருட்டாலோ அல்லது வழக்கத்தாலோ வரும் பெயர்களையுடையன. அவ்வாறன்றி இறைவன் எழுந்தருளி யிருக்கும் இடம் இதுதான் என்று குறிப்பதுபோல் கோயில் என்று அமைந்தது. வடமொழியில் ஆலயம் என்பர். ஜன்ம சரீர மனசிரம வொடுக்கம் ஆலயமாகும். எல்லா நகரங் களிலும் முதன் முதலிலே காடாக இருந்தது. காடுகள் அழித்த பின்னரே நாடுகள் வந்தன. மதுரையும் குலசேகர பாண்டியனால் கடம்பவனம் அழிக்கப்பெற்று உண்டாயது. சிதம்பரமும் முன்னர் தில்லைவனமாக இருந்தது. தில்லை யென்பது ஓர் செடி. அவ்வனம் ஒழித்தலுமே நகரமா யிற்று. அறிஞர்கள் குடியேறினர். அறிஞர்களே வேதியர். அவர்களே தில்லைவாழ் அந்தணர்கள். வேதியர் என்பதனைச் சிவபெருமான் என்றும் கொள்ளலாம். அவரே எல்லா அந்தணரினும் மேம்பட்ட அந்தணர் என்று வேதங்கள் அறைகின்றன. இந்நகரமோ மிகவும் பழமையானது. ஆகவே அது மூதூர். 'தில்லை மூதூர் ஆடிய திருவடி' எனும் மணிவாசகம் நோக்குக. வேள் என்பது மண் என்று பொருள்படும். கோவர் பிசைபவர். மண்ணைப் பிசைந்து குடம் முதலியன வனைபவர்கள் குயவர். இப்பெருங் குலத் தின்கண் வந்தவர் திருநீலகண்ட நாயனார். வந்தவர் என் னும் பதத்தினால் அவதரித்தார், விண்ணினின்றும் இறங்கி னார் என்பது கருத்து. இம்முதலடியில் ஊரும், அதனது தொன்மையும், வாழ்பவர்களின் பெருமையும், திருநீலகண்ட நாயனார் அவதரிக்க தவத்தையுடைய குலமும் கூறப்பட் டது. இந்நாயனார் எத்தன்மையர் என்பது பின் மூன்று அடிகளில் விளக்கப்படுகின்றது. இவர் தில்லை நட்டப் பிரானது திருவடியிலே வணங்கும் மேன்மையுடையவர். இறைவர் இங்கு தனிக்கூத்தாடுபவர். அக்கூத்து இவ்வுல கின்கண் ஆடப்படுகின்ற கூத்தல்லாமையான் தனிக்கூத்து எனப்பட்டது. யாவரும் இரண்டு கால்களினாலே கூத் தாடுவது பழக்கம். இறைவரோ ஒற்றைக் காலினால் ஆடும்

தன்மையுடையவர். கனகசபையின் கண்ணே வலதுகாலை ஊன்றி இடதுகாலை உயர்த்தியிருப்பர். வெள்ளியம்பலமாகிய மதுரையின் கண்ணே இடதுகாலை ஊன்றி வலதுகாலை உயர்த்தியிருப்பர். கால் மாற்றியிருப்பது ஒரு பாண்டியனுக்கு அருள் செய்யும் பொருட்டே. பொன்னுக்கு, வெள்ளிக்கால் மாற்றியிருக்கும் எனும் முதுமொழி இதனை விளக்குவதாகும்.

ஆரியர் இரண்டு காலால் நடைபெறுங் கூத்துக்கு லாஸ்யம் என்பர். ஒற்றைக்கால் கூத்துக்கு அகத்தியர் தாண்டவம் எனக் கூறுகின்றனர். இக்கூத்தோ ஆன்மாக்களுக்குச் சாந்தியை உண்டு பண்ணுவதால் சாந்திக் கூத்தே. சாந்தி என்பது மனத்தெளிவு. தெளிவு ஞானமே எனவே இறைவன் செய்யுங் கூத்து அற்புதக் கூத்து. அற்புதம் என்பது ஞானம். கூத்துகளெல்லாம், பாவம், இராகம், தாளம் இவை மூன்றினையும் தழுவி நிற்கும். இதுவே பரதமாம். இது நடிக்கப்படும் இடம் பூமியாகும். இறைவன் செய்யும் கூத்தோ, இம்மண்ணின் மீதன்று. ஆகாசத்தின் நடுவில் இயற்றுகின்ருனென்று ஆன்ருேர் மொழிந்தனர். ஆகாச மத்தியிலே சம்பு தியானப்படுகிருன் என்று சுருதிகள் கூறுகின்றன. தியானிக்கப்படும் பொருளாகையினுல் இவர் அருள்செய்யும் மூர்த்தியாவர். இவர் செய்யும் நடனமும் பிறர் நலத்தையே கருதிச் செய்யப்படுகின்றது. இக்கோலம் வேறு எந்தச் சமயத்திலும் காண்பது அரிது. இதனைத் தெரிவிப்பான் திருக்களிற்றுப் படியாரில்

" இன்றிச் சமயத்தி னல்லதமற் றேழையுட
னென்றுசொலி மன்றத்து நின்றவரா—ரின்றிங்கே
யங்கமுயிர் பெறவே பாடு மடியவரா
ரெங்குமில்லை கண்டா யிது "

எனவரும் திருவெண்பா உதித்தது. அன்பர்க்கு அருள் செய்தற் பொருட்டே இறைவன் உமாதேவியை நோக்கி ஆநந்தநிருத்தம் புரிகின்ருர். இந்நிருத்தத்தின் கருத்து என்னே? ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் மலங்கள் மூன்று. அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. இம்மூன்றிற் கட்டினின்றும் விடுபடுவதே வீடாகும். இவ் விடுதலையை அடையச் செய்வது இறைவன் நிருத்தக் கோலம். மாயை

யைத் தமரகம் ஏந்திய திருக்கரத்தினுலே நீக்கி, அக்னி ஏந்திய திருக்கரத்தினுல் கன்மமலத்தைச் சுட்டு, முயலகன் மீது ஊன்றிய பாதத்தால் ஆணவமலத்தை அழுத்துகின்றனர். இவ்வாறு மூன்று மலங்களையும் ஒழித்தவற்குக் குஞ்சித பாதத்தினுல் அருளைத் தந்து அமைத்த திருக்கரத்தால் அந்தமில் இன்ப விடெய்துமாறு சேர்ப்பிக்கின்ருர். இதுவே இறைவனது திருக்கூத்து முறைமை. இத்திருக்கூத்து ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களை நிகழ்த்தும்.

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலஞ்
சாய வமுக்கியரு டானெடுத்து—நேயத்தா
லாநந்த வாரிதியி லான்மாவைத் தானமுத்த
ருமெனந்தையார் பாதந் தான்"

"தோற்றந் துடியதனிற் ரேயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரா—மூற்றமா
ஊன்றுமலர்ப் பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப் பதத்தே நாடு"

எனவரும் திருப்பாட்டுகளால் இறைவனது கூத்தின் அருமை கண்டு தெளிக. இவை யாவும் இறைவன் அருட்செயல். இறைவன் அருளே எல்லாஞ் செயவல்லது. உலகத்தை ஆள்விக்கச் செய்வதும் அதுதான். பிறப்பு அறுப்பதும் அதுவே. எல்லாப் பொருளுமாவதும் அதுவே.

"அருளே யுலகெலாம் ஆள்விப்ப தீசன்
அருளே பிறப்பறுப்ப தானல்—அருளே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளு மாவ தெனக்கு"

எனும் காரைக்காலம்மையாரின் செய்யுளால் உணர்க. இவ்வருட் தன்மை வாய்ந்தகூத்து ஆதியும்முடிவும் இல்லாதது. இறைவன் ஆதியும் அந்தமுமில்லாதவனுதலின் அவனது கூத்தும், தோற்றமும் இறுதியும் இல்லாததாயிற்று. தான் ஆனந்த வடிவினனுய் உயிர்களை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கும்படிச் செய்கின்றமையால் அவனது கூத்து தனிக்கூத்தே. அக்கூத்தைத் தரிசிப்போர் தாங்கள் கொண்டகுறிக்கோள் பெறுவது திண்ணம். காண்கிற செயலும் இறை

வன் காட்ட நாம் காண்பதே யொழிய நம்மால் இயலுவ தன்று. இறைவன் நிருத்த கோலத்துத் தன் திருவடியைக் கரத்தால் காட்டி உங்கட்கு அருள்புரிவேன் எனும் தன்மையை அபயக் கரத்தால் விளக்குகின்றான். எனவே உயிர்கள் சுதந்தரமற்றவர்களாய் இறைவனால் ஆட்டப்பெறும் தகுதி வாய்ந்தவர்கள். அதனாலன்றோ, மாணிக்கவாசக சுவாமிகள்,

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்றுஅவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே."

எனத் திருவாசகத்துள் அறிவுறுத்துள்ளார். உயிர்கள் ஆட்டும் திறம் இறைவனிடத்தினின்றும் வெளிப்படுகின்றது. இவ்வாட்டங்களெல்லாம் அவரவர்கள் மதத்துக் கேற்ப நிற்கும். சில வருடங்களுக்கு முன் காட்டப்பெற்றதான பொம்மை யாட்டங்கள் எடுத்துக்கொண்ட நாடகங்களுக் கேற்ப மறைந்திருக்கும் சூத்திர தாரனால் ஆட்டப்பெற்றன. கதைக்கேற்ப ஆட்டங்கள் நிகழுமே தவிர வேறு வகையாக நிகழ்வது அரிது. உயிர்கள் நாடகமும் கன்மத்தின் வழியே தான். மறைந்திருக்கும் சூத்திரதாரன்போல் இறைவனும் மறைந்து நின்று உயிர்களை ஆட்டுவிப்பான். இறைவனது கூத்தோ வேறொருவர் மறைந்து நின்று அவரை ஆட்டுவிக்கும் செயலால் ஆவதன்று. அவரது கூத்துக்கு ஓர் கர்மமும் இன்று.

" நட்டுவ னாரையறிகிலன்........."

பரதநாட்டியத்தின் கண்ணே ஆடுகின்ற ஓர் மகளுக்குப் பின்னே ஒருநட்டுவன் தாளம் கொட்டி அவள் பாவனைகளை யெல்லாம் இசைக்கு ஒத்தபடி நடிக்கும்படி செய்வன். அச்செயல் செய்யும் ஒரு புருடன் இல்லாமையே இறைவன் சுதந்திரனாய் நடிப்பன் எனப் பொருள் விளங்குவதா யிற்று. இறைவன் கூத்து பிறர்நலங் கருதிச் செய்யப் படுவதாயும் என்றும் முடிவில்லாததாயும் அன்பர் தம்மை ஆனந்தத்தில் மூழ்விக்கச் செய்வதாயும் பிறரால் தாம் ஆட்டப்பெறாது சுதந்திரமாய்செய்யப்படுவதாயும் உள்ளது.

இவ்விதம் கூத்தாடும் திருவடிகள் வீரக்கழலை ஆபரணமாகத் தரித்துள்ளன. அது இறைவரது வீரச் செயலைச் செய்ததன் பொருட்டுத் தந்த ஓர் பரிசுபோன்றது. எந்த அரிய செயல்ஒருவனுக்கு நேரிட்ட பயத்தைப் போக்கியதோ அதுவே வீரச் செயலாகும். அதனை மகிழ்ந்து நன்றி காட்டும் பொருட்டாக உலகவர் ஓர் பதக்கமோ அல்லது வேறு ஒரு பொருளோ பரிசாக அவ்வீரனுக்குத் தருவது வழக்கம். அதனை அவன் தன் கைகளிலோ, மார்பிலோ, கழுத்திலோ அணிந்துகொள்வான். இறைவன் ஏற்றருளிய பரிசு கரங்களிலும், கழுத்திலும், மார்பிலும், சிரசிலும் அணியப் பெறவில்லை. எந்தத்திருவடி எமனுடைய பயத்தை மார்க்கண்டேயனுக்கு அகலும்படி செய்வித்ததோ, அதனுக்கு அணியப்பெற்றது என்பது அடக்குபவன் எனப்பொருள் தகும். இறப்பின் துன்பத்திற்கு யாவரும் அஞ்சுவர். அதனை ஒழிக்கும் திருவடியை வாழ்த்தி வணங்குதல்வேண்டும். வாயார வாழ்த்தி நல்ல மனதோடு சிந்திக்கும் நலத்தைப் பெற்றவர் திருநீலகண்ட நாயனார். திருநீலகண்ட நாயனார். தில்லையிலே வேட்கோவர் குலத்தில் உதித்தவரென்றும் திருச்சிற்றம்பலத்தின் கண்ணே தாண்டவம் புரியும் இறைவன் மாட்டு திரிகரங்களினாலும் அன்பு செய்கின்றவரென்றும் இச்செய்யுளால் பெறப்பட்டது. இறைவரோ மன்னுயிர்களினாலே அறிதற்கு அருமையாம். உயிர்களின் துன்பம் போக்குதற்கு இறைவரது அருளானது நேரே பெறப்படுமாயின் உயிர்களுக்கு இறுதியை விளைவிக்கலாம். துன்பம் விளையாது அவைகளுக்கு அதனைப் போக்குதற்கு வழியாக மற்றவர்மீது அவ்வருளைச் செலுத்தி அவர் மூலமாகப் பெறும் அருளே இன்பம் விளைக்கும். ஒரு பச்சிளங் குழவிக்கு மிகவேகத்தோடுள்ள ஒரு மருந்தை உண்பித்தோமானால் அம்மருந்து அஃகுழவிக்கு இறப்பினைத் தரலாம். ஆனால் அம்மருந்து அக்குழவியின் தாய்க்கும் கொடுத்து அவளது கலசங்களில் சுரந்து நிற்கும் பாலின் வழியாக குழந்தைக்கு உண்பித்தோமானால் அக்குழந்தையின் நோய் நீங்குவது கண்கூடு. அவ்வாறே இறைவரும் தன் கருணை நோக்கத்தை அம்மையார் மீது செலுத்தி அவ்வருள் மண்ணுயிர்களுக்குப் பரவிக்கப் படுகின்றது என்பதனை விளக்க,

"மாதொரு பாக நோக்கி என்றூர்"

"பாலுண் குழவி பசங்குடர் பொறாதெனத்
நோயுண் மருந்து தாயுண் டாங்கு
மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப
வையமீன் றளித்த தெய்வக் கற்பின்
அருள்சூற் கொண்ட வையரித் தடங்கட்
டிருமான் சாயற் றிருந்திழை காணச்
சிற்சபை பொலியத் திருநடம் புரியும்
அற்புதக் கூத்த"

எனவரும் குமரகுருபரர் ஆன்ற மொழிகள் கருதத் தக்கன. பல்லுயிர்களுக்கும் தாயானமையால் அம்மையார் உண்ட மருந்து உயிர்களைப் பற்றிய நோய்களை அறுப்பதற்குச் சாதகம் ஆகின்றது. எனவே இறைவர் நோக்கம் அம்மையார்மீது பட்டு உயிர்களுக்கு உண்மைப் பயனைத் தருவதாயிற்று. இறைவனது தனிக்கூத்து உயிர்களது நன்மையைக் கருதியே செய்யப்பட்டது.

சைவ சித்தாந்தக் கருத்துக்களும், அரிய காவிய நயங்களும் அன்பு பெருக்கும் அருள் மொழிகளும் நிறைந்த புராணங்களுள் சிறந்தது இப்பெரிய புராணம். பல நூல்கள் உண்மைப் பொருளை பிறருக்குக் காட்டுவிக்கும் செயலுடைமை யின்மையான் அவை நிராகரிக்கப் படவேண்டும். எது அப்பொருளின் இலக்கணங்களை விளக்குவதோ அதனை அடைவதற்கு விதிகளைக் காட்டியும் அவ்வாறு ஒழுகிய உயிர்களுக்கு இறைவன் திருவடியை அடையச் செய்வதோ அதுவே மெய்ஞ்ஞானம் தரும் நூல். அதுதான் யாவராலும் போற்றும் தகைமையது. அத்துணைச் சிறப்பினை வாய்ந்த இப்புராணம் இறைவனுக்கு அன்பு செலுத்தும் நிலைமையைத் தந்து அவனது அருளைப் பெறும்படியாகச் செய்விக்கும் தன்மையுடைத்தாகும்.

---

தூத்துக்குடி சைவ சித்தாந்த சபையின் 68-வது ஆண்டுவிழாவில்
குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்

அருளிய

# தலைமை உரை

(26-5-52)

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி.

சித்தாந்த செந்நெறிச் செல்வர்களே! செல்விகளே!

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டிலே தமிழ் மணங்கமழும் திருமந்திர நகரிலே, சைவத்தின் ஆக்கமே பெரிதெனப் பல்லாண்டுகளாக அரிய பணிகளை ஆற்றி வருகின்ற பேரன்பர்களாகிய உங்களிடையே இருக்கச் செய்த திருவருளை நினைந்து, வந்தித்து வாழ்த்துகின்றோம்.

## உலகியலும் கடவுட் கோள்கையும்

மக்கள், அறிவும் உணர்வும் பெற்று உலகத்தைப் பார்க்கத் தொடங்கிய காலத்துக் கடவுட் கொள்கை எழுந்தது.

காணப்படும் இவ்வுலகினை ஆக்கி, அளித்து நடாத்துகின்ற ஒரு முதற்பொருளை உணர்ந்தனர் மக்கள். அம் முதற்பொருள், தோற்றமும் ஈறும் இல்லாதது; பேராற்றலும் பேரருளும் உடையது; என்றெல்லாம் திருந்திய அறிவின் துணைகொண்டு தெரிந்து தெளிந்தனர். கண்டதைக் கொண்டு காணாததை உணர்தல் அறிவின் இயற்கை. ஆற்றில் புதுநீர்ப் பெருக்கைக் கண்ட பொழுது "தொலைவில் மழை பெய்தது" என்றும், கூறையின் மேற் புகையைக் கண்ட காலத்து "வீட்டினுள் நெருப்புளது" என்றும் உணர்ந்து கூறுதல் மக்கள் இயல்பு. அதுபோல இவ்வுலகின் வியத்தகு அமைதி

களைக் கண்டு, இவைகளை இங்ஙனம் அமைத்தவனை பேரறிவும் பேராற்றலும் உடைய முதல்வன் ஒருவன் உளன் என உணர்தல் அறிவின் இயல்பு. இவ்வுலகின் நடப்பில் காணப்படும் ஒரு ஒழுங்கும், முறை பிறழா நிகழ்ச்சியும் (Order and consistency) முதல்வனது அமைப்பன்றோ! இதனை மணிவாசகப் பெருமானது,

"......................நாடொறும்
அருக்கனிற் சோதி அமைத்தோன்; திருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன்; திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன்; வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பல கோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன்"

[திருவண்டபகுதி 20-28]

எனவரும் அருள்மொழிகள் விளக்குகின்றன. "சிசிரோ" (Cicero) என்ற உரோம அரசியல் ஞானி, பொருள்களின் இயற்கையமைப்பில், மனித மனத்தின் அப்பாற்பட்டதும், ஆராயும் அறிவு புகமுடியாததும், மனிதனின் சக்தி இயற்ற முடியாததும் ஆகிய ஒரு இயல்பு இருக்கிறது. இத்தகைய இயல்பை ஆக்கித் தருவது மனிதனைவிட மேம்பட்டதாதலின், கடவுளைத் தவிர அது வேறு எதுவாக இருக்க முடியும்?

'There is some thing in nature of things which the mind of man, which reason, which human power cannot effect and certainly that which produces this must be better than man; what can this be but God!"

என்று கடவுளுண்மையை மிக அழகாகச் சுட்டிக் காட்டுகின்றார். முத்தொழிற்படுகின்ற இவ்வுலகு காணப்

படுகின்ற அறிவற்ற பொருள், எனவே தானாக முத்தொழிற்பட இயலாது. ஆதலின், உலகைத் தொழிற்படுத்துகின்ற தலைவன் ஒருவன் உண்டு. ஆதலால்தான், மெய்கண்ட தேவர் முதலிய பெருமக்கள், "காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுளைக் காண்க" என்று ஆணையிட்டனர்.

> " அவன்அவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
> தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
> அந்தம்ஆதி என்மனார் புலவர்"

என்பது சிவஞானம் போதம். இச் சூத்திரக் கருத்துரையில் 'கடவுளை முதலாக உடைத்து இவ்வுலகம்' எனக் கூறினாரேனும், காணப்பட்ட உலகைக்கொண்டே கடவுளுண்மை துணியவேண்டுதல் நோக்கி சூத்திரத்தில் 'தோற்றியதிதியே' என உலகத்தை முன்னரும் 'ஒடுங்கி உளதாம்' எனக் கடவுளைப் பின்னரும் கூறினார்.

> " அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு"

என்று திருவள்ளுவரும் ஓதுகின்றார்.

இக்குறளுக்கு, காணப்பட்ட உலகத்தால் காணப்படாத கடவுட்கு உண்மை கூறவேண்டுதலின், "ஆதிபகவன் முதற்றே உலகு" என உலகின்மேல் வைத்துக்கூறினார் என்று பரிமேலழகர் எழுதிய உரையும் உணரத்தக்கது. இங்ஙனம் முதல்வன் உலகின்காரணனாக - உலகாக - நிற்கின்ற மாட்சிமையை அப்பரடிகள், " தானலாது உலகம் இல்லை ", " எல்லா உலகமும் ஆனாய் நீயே ", " உலகுக்கெல்லாம் வித்தவன்காண் " என்றெல்லாம் கூறிக் காட்டுகின்றார்கள்.

## தமிழகத்தின் கடவுட்கோள்கை

இங்ஙனம் உலகாக - வேறாக - உடனாக நிற்கின்ற ஒருவனை நினைந்து வாழ்த்தி வாழ்கின்ற பண்பாடு, தமிழகத்தில் வரலாற்றுக் காலத்துக்கு முன்னேயே தோன்

றிய தோன்றும். தமிழ்ச்சமுதாயம் மிகப் பழையகாலத்திலேயே கடவுள் நெறிநின்று வாழத் தலைப்பட்டுவிட்டது. அவர்களது வாழ்க்கையே சமயவாழ்க்கையாக-பக்தி நிறைந்த வாழ்க்கையாகக்-காட்சியளித்தது. சமய ஒழுக்க நெறி நில்லாத வாழ்க்கை ஒழுங்கற்ற வாழ்க்கை என்பது தமிழ்ச் சமுதாயம் கண்ட முடிபு. நில்லாமையே நிலையாக உடைய உலகில் நிலைபேறும் தன்மையை அடையவும், இன்னாதனவே நிறைந்துள்ள உலகில் இனியவற்றைக் காணவும் சமய வாழ்க்கையையே துணையாகக் கொண்டனர். அன்பொடு பொருந்தி அருளொடு தழுவிய வாழ்க்கையை "அறவெற்றி" என்று போற்றிக் கைக்கொண்டனர். இத்தகு பண்பாட்டை - பண்டைத் தமிழ் மக்களின் சமய வாழ்க்கையைத் தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு முதலிய சங்க இலக்கியங்களில் காணலாம்.

### தமிழகத்தின் தனி நெறி

தமிழ் மக்களது வாழ்க்கை வளர்ச்சியோடு அவர்கள் கண்ட சமய வாழ்க்கையும் வளர்ந்து வந்தது. அவர்கள் தமது அறிவின் திறத்தினாலும் அநுபவத்தின் ஆற்றலாலும் உணர்வின் உயர்ச்சியாலும், கலையாக - கலைஞானத்தின் பயனாக, நின்றருளும் நீல மணிமிடற்றனது திருவருட்டிறத்தாலும், சமய உணர்ச்சி நிறைந்த வாழ்க்கையில் முன்னேறி வந்தனர். இங்ஙனம் அவர்கள் கண்டொழுகி வந்த திருநெறி சைவ சித்தாந்தப் பெருநெறி.

சைவ சித்தாந்தத் திருநெறி மிகத் தொன்மையானது. உலகிலேயே மிகப் பழைமையானது. காலத்தொடு படாத பெருமையை உடையது. உலகின் மிகப்பெரிய நாகரிகங்களில் எல்லாம் சிவநெறி காணப்படுகிறது. எகிப்தியர், பாபிலோனியர், அகேடியர், அசீரியர் நாகரிகங்களில் இலிங்க வழிபாடு - நந்திவழிபாடு முதலியன காணப்படுகின்றன. "சர்ஜான் மார்ஷல்" துரை அவர்கள், தமது "சிந்து வெளிநாகரிகம்" என்ற நூலில் "சிவநெறி கற்காலத்திலும் முற்பட்டதோடன்றி இன்றளவும் வாழும் சமயம்" என்று கூறியுள்ளார்.

திருவாசகத்தில் தோய்ந்த திருவுள்ளம் படைத்த டாக்டர் போப் ஐயர் தமது திருவாசக மொழிபெயர்ப்பின் முகவுரையில்,

"The Saiva Siddhanta system is the most elaborate and valuable of all religions of India"

என்று கூறி உளம் குளிரப் பாராட்டுகின்றார். சைவ சித்தாந்தத் திருநெறியே பண்டைத் தமிழ் மக்களின் சமயம். அவர்கள் நம்பிக்கைக்கும் நல்வாழ்க்கைக்கும் எடுத்துக்காட்டாக அணிபெற அமைந்திருக்கின்ற சமயம். இங்ஙனம் மிகப்பழைய காலத்திலே தமிழரது பேரறிவின் பயனாக அமைந்தது சைவத்திருநெறி.

சைவ சித்தாந்தக் கொள்கை முடிந்த முடிபாக விளங்குகின்ற பெருமை உடையது. சித்தாந்தம் என்பது, சித்தம்+அந்தம் என்று பிரிந்து முடிந்த முடிபு என்று பொருள்படும். "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத் திறன்" என்பர் உமாபதிசிவம்.

"சிவமெனும் அந்ததர சிந்தை நேர் நோக்க"-என்று தொடங்குகின்ற சிவஞான போத உதாரண வெண்பாவின் உரையில் மாதவச் சிவஞான முனிவர், "அந்தம் வேதாந்தம்; அந்ததரம் சித்தாந்தம், ஆகலின் அதனைப் பெற்றோரது பெருமை கூறுவார் சிவமெனும் அந்ததரம் என்றார்" என்று எழுதுகின்ற பேருரை உணரத்தக்கது. சிந்தாந்தமே சித்தாந்தம் அவைக்கு வேறானவை பூருவ பக்ஷங்கள் என்று இரத்தின திரயத்திலும் போற்றப் பெற்றுளது. இங்ஙனம்தொன்மை நலம் மிக்குக் கொள்கை நலம் சிறந்து விளங்குகின்ற சித்தாந்தச் சிவநெறி தமிழகத்தின் தனி நெறியும் தவநெறியும் ஆம். (தொடரும்)

——

9. ஒழிபு

## பத்திரிகைக் குறிப்பு

ஸ்ரீசெங்கோட்டு வேலவர் கிருத்திகை உற்சவ சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு நிறைவுவிழா, வைகாசி மாதம் 24-ந்தேதி (6-6-52) மாலை 6 மணிக்குக் கைலாயநாதர் ஆலயத்தில், திருப்பராய்த்துறை, ஸ்ரீஇராமகிருஷ்ண தபோவனத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தா அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.

தலைவர் முன்னுரையில், தேர்த் திருவிழாக்கள் செய்யப்படுவதின் உண்மையான உட்கருத்தை எடுத்துச் சொல்லியும், இம்மாதிரி திருவிழாக்கள் நடக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும், ஒரு சிறிய விக்ரகத்தைப் பிரமாண்டமான பதத்தில் வைத்து ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இழுப்பது அறிவுடைமை ஆகுமா என்று ஒரு கூட்டத்தார் இடும் கூக்குரலுக்குத் தகுந்த பதில் சொல்லியும், "முருகன்" என்ற பொருள் பற்றிச் சுமார் 1½ மணி நேரத்திற்கு மேலாக முருகனது பெருமையைப் பற்றியும், தகப்பன் சுவாமி, அப்பாசாமி, சுவாமிநாதன் என்று அவருக்குப் பெயர்கள் ஏற்பட்ட காரணத்தை விளக்கியும், அவனை வழிபடுபவர்களின் வழிபாடு உண்மையாக இருந்தால் அவனுடைய பேராற்றல் உறுதியாகக் கிடைக்கும் என்றும் கூறினார்.

அது சமயம். விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் வித்வான் திரு. ந. சேதுரகுநாதன் அவர்கள் திருவாசகத்தில் உள்ள பொன்னெடுங் கோயில் என்ற சொற்றொடரைத் தலைப்பாகக் கொண்டு சுமார் 1½ மணி நேரம் சொற்பொழிவாற்றினார்.

இரவு 9-30 மணிக்கு வந்தனோபசாரம் கூறக் கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்திற்கு ஆண்களும் பெண்களும் திரளாக வந்திருந்தனர்.

—இரா. வே. கோபால்

——

## 2. பிழை திருத்தம்

சித்தாந்தம்—நந்தன ஆனி 1952 ஜூன்

| பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 229, கடைசி வரி | பேரம்பலமே | எதிரம்பலமே |
| 230, 7-வது வரி | பேரம்பலம் | எதிரம்பலம் |
| 231, 20-வது வரி | பல கல்வெட்டுகள் | பல்லவ கல் வெட்டுகள் |

---

## 3. பாணந்துறை ஆலய கும்பாபிஷேகம்

ஈழநாட்டின் தலைநகராகிய கொழும்பிலிருந்து, ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் திருப்புகழ்ப் பாடல் பெற்று மிளிரும் திவ்விய க்ஷேத்திரமாகிய ஸ்ரீ கதிர்காமத்திற்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள பாணந்துறை யென்னும் நகரில், சைவத் திருவாளர் டிஸ்றிக் நீதிபதி (District Judge) ஸ்பென்ஸர் இராசரத்தினம் அவர்களின் பேருழைப்பினாலும், தளராத வூக்கத்தினாலும், ஓர் கந்தசாமி கோவில் மிகக் குறைந்த காலவெல்லையுள் கட்டி முடிக்கப்பட்டது. அதன் மகாகும்பாபிஷேகம் நிகழும் தாரணஞு வைகாசிமீ 23 ந்தேதி (5—6—52) வியாழக்கிழமை பன்னூற்றுக் கணக்கான அன்பர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது. இவ்வாலயத்தின் இரு புகைப்படங்கள் ராப்பர் இரண்டாம் பக்கத்தில் வந்துள்ளன.

மேற்படி ஆலய ஸ்ரீ கதிர்வேற் கந்தசுவாமி துதி பின் வருமாறு :—

காப்பு

நேரிசை வெண்பா

1. செந்திற் கடலெதிரே சேரும்பா ணந்துறையில்
வந்தகதிர் வேலவனை வாழ்த்துதற்கு—முந்தி
யுறையுங் கணபதியென் னுள்ளத் துறைந்து
குறைதவிர்ப்பார் சிந்தையருள் கூர்ந்து.

2. அன்னையொடு தந்தையுமா யண்ட சராசரங்கள்
முன்னிப் படைத்தழிக்கும் மூர்த்தியே!—சின்மயமாம்
ஆறுமுகா! பாணந் துறையுறையு மையாவே!
ஏறுமயில் மீதிலிங்கு வா.

3. உன்னைநிதம் நெஞ்சத்தி லுன்னுமடி யாருளத்தே
மன்னிக் கருணைசெயும் மாதேவா—இன்னற்
பிறவியறப் பாணந் துறையுறைந்து பேதை
அறவினைதீர்த் துன்னருள்தந் தாள்.

4. ஆளா விடிலோ அடியேனுக் கார்துணைதான்
மீளா வடியவனும் மேன்மைதரத்—தாழாதே
வந்தருளும் பாணந் துறையுறைவேற் கந்தையா!
சந்ததமும் உன்னருளைத் தந்து.

5. தாதாவென் றன்பரெலாந் தாளைப் பணிந்துறைய
நாதா! அவர்க்கருளை நாட்டுதற்கு—மாதாவை
ஒத்தகுகா பாணந் துறையூ ருறைந்தருளிச்
சித்தியெலா மீவாய் சிறந்து.

6. தீரா வினையகற்றிச் சித்தியொடு முத்திதரக்
கூரார்வே லாயுதமுங் கொண்டுறைந்தே—சீரார்
மலியும்பா ணந்துறையில் வந்தருளெம் மையா
கலியுகநா தாகருணை காட்டு.

## திருப்பணித் தொண்டர் வாழ்த்து

### கட்டளைக் கலித்துறை

திருப்பணி செய்த சிவநேயச் செல்வரும் சிந்தைவைத்தே
பொருட்பிர யோகஞ்செய் புண்ணிய சீலப் புனிதர்களும்
விருப்பமொ டுக்கிய மேலவர் யாவரும் வேலவனுர்
அருட்பிர சாதப் பெருவாழ்வொ டின்ப மடைகுவரே.

### கும்பாபிஷேக தினம்

நந்தனவை காசிமதி நாலைந்தோ டேமூன்று
வந்தகுரு வாரம் சுவாதிநாள்—சந்தரெட்டை
சேருஞ் சுபதினத்தே செல்வப்பா ணந்துறைவேள்
நேருங்கும் பாபிடேக நிறைவு.

— —

## மதிப்புரைகள்

1. இராமேசுவர யாத்திரை: எழுதியவர் தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீன வெளியீடு. குருபூஜை விழா, அணிமலராக வெளியிடப் பட்டது. தற்போது கொலு வில் வீற்றிருக்கும் மகா சந்நிதானம் அவர்கள் காசியாத் திரை செய்த பிறகு இராமேசுவர யாத்திரை செய்யப் புறப் பட்டுப் பல ஆலயங்களையும் தரிசித்துப் பின்னர் இராமேசு வரம் சென்று இறைவனுக்கு வழிபாடு செய்துவிட்டு திரும் பும் வழியில், குமரி, திருவனந்தபுரம், திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், திருக்குற்றாலம் முதலிய தலங்கள் தோறும் தரிசனம் செய்து விட்டு, திரும்பி வந்த வரலாறு முழுவதும் தெளிவான முறையில் சொல்லணி, பொருளணி, ததும்பப் பல மேற்கோள்களுடனும், பல புகைப் படங்களுடனும் வெளியிட்டிருக்கும் ஓர் அரிய தமிழ் நூல் இதுவாகும். இதனைத் தமிழ் மக்கள் படித்து இன்புறுவதோடு பல நற் பலன்களும் பெறுவார்களாக.

2. பாவலரும் காவலரும்: ஆக்கியோன் வித்வான் அன்பு கணபதி. விலை ரூ. 1-12-0. கிடைக்குமிடம் அன்பு மனை, 7, வைத்தியநாத முதலி தெரு, சேத்துப்பட்டு, சென்னை. இந் நூலில் 10-கட்டுரைகள் இருக்கின்றன. சங்க காலத்தில் பாவலரும், காவலரும் இருந்தனர். பாவலர் காட்டிய வழியில் காவலர் சென்றனர். அதுகண்டு, குடி மக்கள் தமிழைப் போற்றினர். எவ்வாறு போற்றினர் என்பதை இந்நூல் சித்தரித்துக் காட்டுகிறது. பத்து ஓவி யங்களாக அக்காலச் செய்திகளை ஆசிரியர் தீட்டியிருக்கின் ருர். அக்காலத்தில் நடந்த செய்திகளை இக்காலத்து மக் கள் உணரவேண்டாமா? அவ்வாறு உணர்ந்து தற் போதைய போக்கைச் சீர்படுத்துவதில் நன்மை உண்டு என்று எடுத்துக் கூறி அவர் தீட்டின ஓவியங்களை ஆசிரியர் நமக்குக் காட்டுகின்ருர். தமிழ் மக்கள் சிறப்பாக மாணவர் கள் இவைகளைக் கண்டு மகிழ்வார்களாக.

———

## அறிக்கை

சிவநேசர் திருக்கூட்டம், காரைக்குடி. நந்தன வருடம், திருமுறைப் போட்டிகள். முதற்பகுதி—திருமந்திரத் திரட்டு-40-பாட்டுகள் ஒப்புவித்தல். 10 வயதுக்கு மேல், 16 வயது வரை. இரண்டாம் பகுதி—20 பாட்டுகள் ஒப்புவித்தல். 10 வயது முடிய.

ஆவணி, 2, 3 தேதிகளில், காலை 9-மணி முதல், காரைக்குடி—அறுபத்து மூவர் மடத்தில் மூன்று நீதிபதிகளின் முன்னிலையில் போட்டிகள் நடைபெறும்.

பரிசுகள் 24-8-52-ல், திருக்கூட்டத்து 29-வது ஆண்டு விழாவில் கொடுக்கப் பெறும்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஆடி-30-ம் தேதிக்குள் ரா. ம. சோ. திருநாவுக்கரசு செட்டியார், முத்துப் பட்டணம், காரைக்குடி என்று எழுதவும்.

திருமந்திரத் திரட்டு வெளியிடப் பட்டுள்ளது. பெற்றுக் கொள்ளலாம்.

* * *

ஜுலை மீ 30உ அதாவது ஆடி சுவாதியன்று சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமான் நாயனார் இருவருடைய திருநட்சத்திரமும் வருகிறது. முந்திய ஆண்டுகள் போலவே இந்த ஆண்டும் திருவஞ்சைக்களத்தில், கோவை சேக்கிழார் திருக் கூட்டத்தார் அபிஷேகம், திரு ஆராதனை முதலியவை நடத்துவார்கள். அடியார்களுக்கு மாகேஸ்வர பூஜை நடக்கும். சைவ அன்பர்கள் வருக, வருக.

* * *

கோவைத் தமிழ் சங்கத்தில் சென்ற நான்கு ஞாயிற்றுக் கிழமைகளில், அன்பு உடைமை, அருள் உடைமை, சைவத்திருமுறைகள், சிதம்பர தரிசனம் என்ற தலைப்புகளில், திருவாளர்கள், அருணாசல நாட்டார், கந்தசாமி அடிகள், தி. ர. முத்துகிருஷ்ணப் பிள்ளை. அருணாசலம் பிள்ளை என்பவர்கள் பேசினார்கள்.

---

## செய்தித் திரட்டு

1. லெட்சுமிபுரம் சோக்கலிங்கம் வித்தியாசாலை வெள்ளி விழா :—மேற்படி வெள்ளி விழா நந்தன ஆண்டு, வைகாசித் திங்கள் 2-ஆம் நாள் வியாழக்கிழமை, திரு

வண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி சிவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், திருச்சாழல் நடிப்பு, திருவாசகக் கரகக் கும்மி போன்ற சிறு நாடகங்களும், பாட்டுப் பேச்சுக்களும், மாணவ மாணவிகளால் நிகழ்த்தப்பெற்றன.

2. காரைக்குடி திருவாசக மடம் :—*27–6–52* அன்று திருப்புறம்பயம் மாணிக்கவாசகத் தம்பிரான் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருவாசக விழாவின்போது, உடுமலைப்பேட்டை கா. நயினார் முகமது அவர்களும், லால்குடி அ. நடேச முதலியார் அவர்களும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

3. சைவசித்தாந்தக் கழகம், விருதுநகர் - திருவாசக விழா :—*26–5–52* அன்று குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம், சிவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமையில் நடைபெற்றபோது, கவுந்தப்பாடி கோ. முருகையா திருவாசக இசைவிருந்து நிகழ்த்தினார்கள். திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர்கள் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களும், மு. கோவிந்தராசன் அவர்களும் முறையே "மணிமொழி கண்ட மாண்பு," "ஊஞ்சல் கயிறற்றால் தாய தரையே ஆம்" எனும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

4. தூத்துக்குடி சைவசித்தாந்த சபை :—தூத்துக்குடி சித்தாந்த பேராசிரியர், திரு. ந. சிவகுருநாதப் பிள்ளை அவர்களைச் சைவ உலகமும் தமிழ் உலகமும் நன்கறியும். இவர் சைவத்திற்கும், தமிழுக்கும் அறுபது ஆண்டுகளாகத் தொடர்ந்து தொண்டாற்றி வந்து இருக்கின்றார்கள். இவர்களுடைய எண்பதாவது வயதுப் பிறப்புநாள் வரும் ஆடித் திங்கள் 10-ஆம் நாள் (*25–7–52*) தொடங்குகின்றது. அன்று அவரை வாழ்த்தி வணங்கவும், பொற்கிழி அளிக்கவும் ஷை சபையார் முடிவு செய்துள்ளனர்.

திரு. தெ. ச. சு. சோமசுந்தரம் பிள்ளை, அமைச்சர், சைவசித்தாந்த சபை என்ற முகவரிக்கு வாழ்த்தும், பொருளும் அனுப்பத் தமிழ், சைவ அன்பர்கள்கேட்டுக்கொள்ளப் படுகின்றார்கள்.

ஜூன் மீ 7, 8, 9 தேதிகள்: தென்காசி திருவள்ளுவர் கழகம், வெள்ளிவிழா.

தலைவர்கள்—Sri P. T. ராஜன், பால்நாடார், சேதுப் பிள்ளை, சா. கணேசன், திருவண்ணாமலை ஆதீன சுவாமிகள் ஆகியோர்களின் தலைமையில் சிறப்பாகநடைபெற்றது.

* * *

ஜூன் 9: சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம். மயிலை கபாலீச்சுரத்தில் வழிபாட்டுக் கூட்டவை தோற்றுவிக்கப் பட்டது.

* * *

ஜூன் 19: திருச்செங்கோட்டு வேலவர் கிருத்திகை உற்சவம் நடைபெற்றது. உற்சவ சங்கத்தாரின் 9-வது ஆண்டு அறிக்கையும், வரவு செலவுக் கணக்குத் திட்டமும் வெளியிடப்பட்டன. அதில் ஆண்டு முழுவதும் நிகழ்த்திய சேவைகள், சொற்பொழிவுகள், கூட்டங்கள் முதலியவற்றின் அறிக்கை வெளியிடப் பட்டது.

* * *

ஜூன் 22: கோவை ஜில்லா சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம். V. C. சுப்பைய கவுண்டர் தலைமையில் நடைபெற்றது. பல சொற்பொழிவுகள் நிகழ்ந்தன.

* * *

ஜூன் 22: திரிசிரபுரம், சைவசித்தாந்த சபை 67-வது ஆண்டு நிறைவு விழா திருவாளர் கி. இராமலிங்க முதலியார் அவர்கள் தலைமையில் கா. வெள்ளை வாரணர் "திருமுறைப் பயன்" பற்றியும், ஆ. நடேச முதலியார் "திருமுருகாற்றுப் படை" பற்றியும், ஔவை துரைசாமிப் பிள்ளை "சிவஞானம்" பற்றியும் பேசினார்கள். முந்திய வருஷத்திய அறிக்கை வெளியிடப் பட்டது.

* * *

ஜூன் 25: திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி 44-வது பட்டம் சுவாமிகளின் குருபூஜை பல பெரியார்கள் சொற்பொழிவுகளோடு நடைபெற்றது.

ஜூன் 26 முதல் 29 வரை : திருக்கழுக் குன்றம் " திருமுறை விழா " 7-வது விழா. பல பெரியார்கள் சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். இசையரங்கு நடைபெற்றது. வழிபாடுகள் நடந்தன.

* * *

ஜூன் 29 : சைவத் திருமணம் :—கோவைக் கடுத்த கணபதியில் தமிழ்ப் புலமை திருமதி குழந்தை அம்மைக்கும், திருவாளர் நடராஜனுக்கும் திருமணம் நடந்தது. கணக்கற்ற தமிழ்ப் புலவர்களும், சைவப் பெரியார்களும் வாழ்த்துப் பாக்களும், வாழ்த்துரைகளும், ஆசிகளும் வழங்கினார்கள். திருமதி குழந்தை அம்மை சைவத்திற்கும் தமிழுக்கும் அருந்தொண்டு செய்பவர்கள். பல ஆண்டுகளாக சமாஜத்தில தொடர்பு கொண்டிருப்பவர்கள். சென்ற ஆண்டு குன்றக்குடி சமாஜக் கூட்டத்தில் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மணமகனும், உயர்ந்த கல்வி கற்றவர். மணமக்கள் இருவரும் நீடூழி வாழ்ந்து பதினாறு பேறும் பெற்றுச் சைவத்திற்கும், தமிழுக்கும் இடையறாத் தொண்டு புரியும்படி இறைவன் அருள் புரிவானாக.

* * *

சென்னை - இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜனசபையின் 48 - ம் ஆண்டு விழா, 1952, ஜூலை 11, 12, 13-வெள்ளி, சனி, ஞாயிறுகளில் இராயப்பேட்டை மோபரீஸ் சாலையிலுள்ள சபையின் குகானந்த நிலையத்தில் திருவாளர் – திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் வாழ்த்துரையுடன் தொடங்கப்பட்டு நடைபெறும். பல அன்பர்கள் அரிய பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்கள்.

———

## சமாஜ வெளியீடுகள்

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பெரியபுராணம்—அகராதியுடன் | ... | 3 | 0 |
| நாலாயிர திவ்ய பிரபந்தம் | ... | 3 | 0 |
| சுந்தரர் தேவாரம்—குறிப்புரையுடன் | ... | 1 | 0 |
| திருவாசகம் மூலம் | ... | 0 | 4 |
| திருப்போரூர்ச் சந்நிதிமுறை | .... | 0 | 12 |
| திருவாசகம்-திருச்சதகம் (பண்டிதமணி மு. கதிரேசஞ் செட்டியார் பேருரை ரூ. 8. அங்கத்தினருக்கு | | 7 | 0 |
| சித்தாந்த அஷ்டகம் (உரையுடன்) [சிவப்பிரகாசம் (பிற்பகுதி), திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது,] உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் துகளறுபோதம் (மூலம்) | ... | 0 | 8 |
| சிவஞானபோதம் தமிழ் முதல் நூலே மொழி பெயர்ப்பல்ல. | ... | 0 | 2 |

தபாற்கூலியுள்பட முன்பணம் அனுப்புக. நூல்கள் வி. பி.-யில் அனுப்பப்படமாட்டா.

### குறைந்த விலைக்கு விற்பனை

அடியிற் குறித்த ஆண்டுகளின் 'சித்தாந்த' மலர் (12 இதழ்கள்)ஒன்று ஒரு ரூபா வீதமும், முழுமலரல்லா தனி இதழ் ஓர் அணு வீதமும் விற்கப்படும். வேண்டியவர் தபாற் செலவுடன் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

[மலர் 3 (1930), 4 (1931), 14 (1941), 22 (1949)]

Printed at the Sadhu Press, 15, Ganapathi Mudali Street, Royapettah by V. Rajammal, (P I. Card No. M. S. 115) Edited and Published by C. M. Ramachandran Chettiar, B.A., B.L., for the Saiva Siddhanta Maha Samajam, at 53, Thiruvalluvar Street, Saidapet, Madras-15, P.I.Card No. M. S. 81.